நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு



அம்பிகா ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி 422839, 43?238

செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DI..APATHI இல 6597 1990 மே 25 வெள்ளிக்கிழமை ★ ★ ★ දිනපති

தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்

Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO.11.
Phone: 422839 434238

# புலிகள் தமது ஆயுதங்களை
# கைவிடும் வரை மா. சபை
# தேர்தல் இல்லை

## அமைச்சர் ரஞ்சன் அறிவிப்பு

### அரசு யாருடன் பேசலாம் என்று நிபந்தனை விதிக்க புலிகளுக்கு அதிகாரம் கிடையாதாம்

— இரா புத்திரசிகாமணி —

கொழும்பு, மே 24

தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏனைய குழுக்களும் தம்மிடமுள்ள ஆயுதங்களைக் கைவிடும் வரை வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட மாட்டாது. இது அரசாங்கத்தின் தீர்மானம் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன நேற்று பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்தார்.

★ வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது பற்றி ஜனாதிபதி இன்னும் இரண்டு வாரங்களுக்குள் முடிவு செய்வார்-

★ அரசு யாருடன் பேச வேண்டும் என்று நிபந்தனை விதிக்கும் அதிகாரம் விடுதலைப் புலிகளுக்கு கிடையாது-

★ ஆறாவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்க வேண்டுமென்ற புலிகளின் கோரிக்கையை அடுத்து அந்த விஷயத்தை ஜனாதிபதி தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறார்-

## சோமண்ணை



அப்ப பின்னை நட்டத்திலையும் பங்கேற்றுக் கொண்டு போர்க்கொடி உயர்த்தாமல் மௌனமாக இருப்பினம் எண்டு சொல்[illegible]ன்.

## சடலம் மீட்பு

சுட்டுக் கொன்று புதைக்கப்பட்டிருந்த பாற்பண்ணை உரிமையாளர் ஒருவரின் சடலத்தை சேருநுவர பொலிஸார் மீட்டுள்ளனர்.

[2ஆம் பக்கம் பார்க்க]

## போபர்ஸ் ஆவணம் இந்திய அரசிடம்

சென்னை, மே 24

போபர்ஸ் ஆயுத ஊழல் தொடர்பான இரகசிய ஆவணங்களை சுவீடன் அரசு, இந்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறது-

திரு ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமராக பதவி வகித்த காலத்திலேயே இந்த போபர்ஸ் ஆயுத ஊழல் சம்பவங்கள் இடம் பெற்றன-

[2ஆம் பக்கம் பார்க்க]

## அரச ஊழியர் விடுமுறைகள் குறைப்பது பற்றி ஆராய்வு

கொழும்பு, மே 24

அரசாங்க ஊழியர்களின் வருடாந்த விடுமுறை தினங்களைக் குறைப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது-

பல பிரிவுகளிலிருந்து அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சுகளுக்கு இணங்கவே அரசு ஊழியர்களின் விடுமுறை தினங்களைக் குறைப்பது குறித்து ஆராய்ந்து வருகிறது-

இதன்படி அரசாங்க ஊழியர்களுக்கான வருடாந்த விடுமுறை நாட்களின் எண்ணிக்கை 45இலிருந்து 30 ஆகக் குறையலாம் என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அவ்வாறே அரசாங்க ஊழியர்களின் வருடாந்த வேலை நாட்களின் எண்ணிக்கை 186இலிருந்து 216 ஆக அதிகரிக்கப்படும்-

இந்த விடுமுறை மாற்றங்களின் பின்னர் அரசாங்க ஊழியர்களின் விடுமுறை நாட்கள் வருடாந்த விடுமுறை, வைத்திய விடுமுறை எனப் பிரிக்கப்பட மாட்டா.

இவை பொதுவான விடுமுறையாகவே கணிக்கப்படும். இது தொடர்பான திட்டம் ஒன்றும் தயாரிக்கப்படும்.

புதிய விடுமுறை மாற்றங்களின் போது தேசிய வீரர்களின் ஞாபகார்த்தமாக ஒதுக்கப்பட்ட மே 22 ஆம் திகதிய விடுமுறை ரத்துச் செய்யப்படும்-

தேசிய வீரர்கள் தினக் கொண்டாட்டங்கள் பெப்ரவரி மாத சுதந்திர தினக் கொண்டாட்டங்க

[2ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கு, கிழக்கில் அரசு ஆளும் உரிமை இழந்து விட்டது

### — ஸ்ரீ. ல. சு. கட்சி எம். பி.

கொழும்பு, மே 24

வடக்கு கிழக்கை ஆளும் உரிமையை அரசாங்கம் இழந்து விட்டது- தமிழீழ விடுதலைப் புலிகளின் அட்டகாசம் இன்று மலையகத்தையும் உலுக்கும் அளவுக்கு வந்து விட்டது-

ஸ்ரீ ல சு க எம் பி திரு சி வி குணரத்ன இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது-

திரு குணரத்ன எதிர்க்கட்சிகளின் சார்பில் விவாதத்தை ஆரம்பித்து வைத்து பேசியதாவது-

வடக்கு கிழக்கில் இருந்து வந்த

# பஸ் டிப்போக்கள்
# மக்கள் மயமாகும்

★ அரசு யாருடன் பேச வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கும் அதிகாரம் விடு தலைப் புலிகளுக்கு கிடையாது—

★ ஆறாவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்க வேண்டுமென்ற புலிகளின் கோரிக் கையை அடுத்து அந்த விஷயத்தை ஜனாதிபதி தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறார்—

★ ஈ பி ஆர் எல் எப் இயக்க உறுப்பினர்களுக்கு இலங்கை இராணுவம பயிற்சி அளித்து வருகிறது என்ற புலிகளின் ஆலோசகர் டாக்டர் அன்டன் பாலசிங் கம கூறுவது "நான்சென்ஸ்" அதாவது அர்த்தமற்றது—

மேற்கண்டவாறாகவும பெருந்தோட்டத்துறை அமைச் சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான திரு ரஞ்சன் விஜேரத்ன கூறினார்—

அமைச்சரவைத் தீர்மானங் கள் பற்றி அவர் மேலும் கூறியதாவது—

புலிகள் கூ... போல் வடக்கு கிழக்கி... உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்திவிட முடியாது—

ஆயுதங்களை ஏந்தித் திரிப வர்கள் மத்தியில் சுதந்திரமான தேர்தலை நடத்த முடியாது—

துப்பாக்கி முனையில் தேர் தலை நடத்துவதை விட புலிக ளின் பெயர்ப் பட்டியலை "கெஸட்"டில் வெளியிட்டு விட லாமே!

இது ஒரு போதும் நடக்காது— புலிகளும் ஏனைய ஆயுதம தாங்கிய குழுக்களும் எல்லா ஆயுதங்களையும் கைவிட்ட பின் னரே தேர்தல் நடத்தப்படும— அதற்கு முன் தேர்தல் என்ற

[2ஆம் பக்கம பார்க்க]

# ஈ. பி. ஆர். எல். எப். உடன் இனி

## தனிப்பட்ட பேச்சு அவசியம் இல்லை —ரஞ்சன்

கொழும்பு, மே 24

ஈ பி ஆர் எல் எப் இயக்கத் துடன் இனி தனிப்பட்ட பேச்சு வார்த்தை அவசியம இல்லை. அவர்களுடைய 19 அம்சக் கோரிக்கை தொடர்பாக சர்வ கட்சி மாநாட்டிலேயே கலந் துரையாடப்படும.

தோட்டத் தொழிற்றுறை அமைச்சரும் பாதுகாப்பு ராஜா ங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன இப்படிக் கூறினார்—

ஈ பி ஆர் எல் எப் இயக்கத்த டன் அடுத்த கட்டப் பேச்சுவார் த்தை எப்போது என்ற அமைச்ச ரிடம் கேட்ட போதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது—

ஈ பி ஆர் எல் எப் இயக்கத்தி னரால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் பல ஜனாதிபதியி னால் முன் வைக்கப்பட்டிருக்கும 20 அம்சத் திட்டத்தில் உள்ளடக் கப்பட்டுள்ளன.

அவை சர்வகட்சி மாநாட்டில் இப்பொழுது பரிசீலனை செய்யப் பட்டு வருகின்றன. அங்கேயே இந்த 19 அம்சக் கோரிக்கை களையும் ஆராய முடியும்—

இப்படி அமைச்சர் கூறினார்—

கேள்வி— உங்களுடைய கூற்றை அவர்கள் ஏற்றுக் கொண்ட னரா?

பதில்— ஆம். அதன்படி கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டுப் பிரதிநிதி கள் கூட்டத்தில் அவர்கள் கலந்து கொண்டனர்.

கே— அடுத்த பேச்சுவார்த்தை எப்போது?

ப— அதற்கு அவசியம் இல்லை—

கே— ஈ பி ஆர் எல் எப் இயக்கத் துடன் பேச்சை முடித்துக் கொண்ட அரசாங்கம் புலிகளு டன் மட்டும தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்து வது ஏன்?

ப— சர்வகட்சி மாநாடு கூட்டப்

[2ஆம் பக்கம பார்க்க]

# மக்கள் மயமாகும்

# ஊழியருக்கு பங்குகள்

## இலவசமாக வழங்கப்படும்

கொழும்பு, மே 24

இலங்கை போக்குவரத்துச் சபை மக்கள் மயப்படுத்தப் படும— அதன் பங்குகள் அனைத்தும சபை ஊழியர்க ளுக்கே இலவசமாக பகிர்ந்த ளிக்கப்படும—

தற்பொழுது நடைமுறையில் இருக்கும மாகாண பிரதேச சபைகள் ஒழிக்கப்பட்டு அவை தனித்தனியான டிப்போக்களாக நிர்வகிக்கப்படும—

இத் திட்டம எதிர்வரும ஜூன் மாதம முதல் நடை முறைப்படுத்தப்படும—

இதனை போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சர் திரு விஜயபால மெண்டிஸ் நேற்று பத்திரிகையாளர்களிடம தெரி வித்தார்—

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின் பின் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும தெரிவித்ததாவது—

இப்பொழுது 3,800 பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளன— அதேவேளை 50,000 ஊழியர்கள் பணிபுரிகின் றனர்— போக்குவரத்துச் சபை என்றுமே லாபகரமாக இயங்க வில்லை—

இதனைத் தொடர்ந்தே அர சாங்கம போக்குவரத்துச் சபையை மக்கள் மயப்படுத்த தீர்மானித்துள்ளது—

இதன்படி போக்குவரத்து சபைக்குச் சொந்தமான சொத் துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பங்குகள் யாவும் அங்கு பணியாற்றும ஊழியர்களுக்கே பகிர்ந்தளிக்கப்படும—

முதற் கட்டமாக 50 வீதமான பங்குகள் ஊழியர்களின் சேவை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப் படும— ஏனைய 50 சதவீதமான பங்குகளும் 3 வருடங்களின் பின் ஐந்து வருடத்திற்குள் அவர்களி டமே ஒப்படைக்கப்படும—

டிப்போக்களில் பணிபுரியும ஊழியர்களே தமது பணிப்பா ளர் சபைகளை தெரிவு செய்வர் முழு நிர்வாகமும ஊழியர்களி டமே ஒப்படைக்கப்படும—

போக்குவரத்துச் சேவையை சீராகவும ஒழுங்காகவும நடத்து வதற்கு ஆலோசனைகளை வழங்கவும நிர்வாகத்தை கண்

[2ஆம் பக்கம பார்க்க]

தம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது—

திரு குணரத்ன எதிர்க்கட்சிக ளின் சார்பில் விவாதத்தை ஆரம பித்து வைத்து பேசியதாவது—

வடக்கு கிழக்கில் இருந்து வந்த கொலைக்குழு ஒன்று கொழும் பில் செயல்படுகிறது— திரு சாம் தம்பிமுத்து, கலா தமபிமுத்து ஆகி யோர் இக்குழுவினால் கொல் லப்பட்டுள்ளனர்— அரசாங்கம் இதனைப் பார்த்துக் கொண்டி ருக்கிறது—

திரு சாம் தம்பிமுத்து ஐ நா சபை, மனித உரிமை சபை, கனடா, லண்டன் ஆகிய இடங்க ளுக்குச் சென்று மனித உரிமை மீறல் பற்றி பேசுவதற்கு இருந்த வேளையே சுடப்பட்டுள்ளார். இதற்கு அரசு என்ன நடவடிக்கை

[2ஆம் பக்கம பார்க்க]

# இராணுவம் தாக்கலாம் என

## வடக்கு கிழக்கில் அச்சம்

### —சேனாதிராஜா

கொழும்பு, மே 24

வடக்கு, கிழக்கில் மீண்டும இலங்கை இராணுவம தாக் கலாம என்ற அச்சத்தால் தமிழ் மக்கள் தங்கள் இடங் களை விட்டு வெளியேற முயற்சித்துக் கொண்டிருக்கின் றனர்—

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் திரு மாவை சேனாதிராஜா இவ் வாறு நேற்று நாடாளுமன்றத் தில் கூறினார்—

[2ஆம் பக்கம பார்க்க]

# ஜனாதிபதி நாளை முதல்

## மாகாண சுற்றுப் பயணம்

கொழும்பு, மே 24

ஜனாதிபதி திரு ஆர் பிரேம தாச நாளை தமது மாகாண சுற்றுப் பயணத்தை ஆரம பிக்கிறார்.

ஒவ்வொரு மாகாணத்துக்கும விஜயம செய்யும ஜனாதிபதி மாகாண முதல்வர், நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உதவி அரச அதிபர்கள் மற்றும கிராம சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோரைச் சந்திப்பார்.

அரசாங்கத்தின் அபிவிருத் தித் திட்டங்களுக்கு அடிமட்ட அளவில் மக்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதை உறுதி செய்யும நோக்கத்துடனேயே ஜனாதிபதி இம மாகாண சுற் றுப் பயணத்தை மேற்கொள்கி றார்.

[2ஆம் பக்கம பார்க்க]

# நாளை அகில இலங்கை

## இந்து சமய இறுதிப் பரீட்சை

கொழும்பு, மே 24

அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும இந்து சமய இறுதிப் போட்டியில் வெற்றி பெறும ஒன்பது பேருக்கு தங் கப் பதக்கங்கள் வழங்கப் படும—

இதற்கான இறுதிப் போட்டி எதிர்வரும 26 ஆம திகதி கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலயத்தில் நடைபெறும

பரிசளிப்பு வைபவம 27 ஆம திகதி பிற்பகல் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில்

[2ஆம் பக்கம பார்க்க]

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

நாட்டின்

# சகல பாடசாலைகளிலும் கூட்டுறவு கடைகள்

## மே.மாகாணகூட்டுறவுதுறை அமைச்சர் யூசுப்

கொழும்பு, மே 24

நாட்டின் சகல பாடசாலைகளிலும் கூட்டுறவு கடைகள் ஆரம்பிக்கப்படும்.

மேல் மாகாண சபையின் கூட்டுறவு மற்றும் கைத்தொழில் அமைச்சர் ஜனாப் ஏ எம் யூசுப் இதனைத் தெரிவித்தார்.

பம்பலப்பிட்டியில் உள்ள தனது அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் பத்திரிகை மாநாடு ஒன்றை அவர் நடத்தினார்.

இம்மாநாட்டில் ஜனாப் யூசுப் மேலும் கூறியதாவது:—

பாடசாலை மாணவர்களின் மதிய உணவுக்காக தினசரி 3 ரூபா பெறுமதியான உணவு முத்திரைகளை வழங்க கல்வி அமைச்சு முடிவு செய்திருக்கிறது.

இந்த உணவு முத்திரை மூலம் தாம் விரும்பிய உணவுப் பொருட்களை பாடசாலைக்குள் வாங்குவதற்கு வசதியாகவே பாடசாலைகளில் கூட்டுறவு கடைகள் அமைக்கப்படவுள்ளன.

மேல் மாகாண சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கு மதிய போசனத்துக்கு அரசாங்கம் தினசரி 30 லட்ச ரூபாவை செலவிடுகிறது.

கூட்டுறவு துறையை பாடசாலைகளில் ஒரு பாடமாக சேர்த்துக் கொள்ள வேண்டும் என நான் கல்வி அமைச்சரை கேட்டிருக்கிறேன், அதற்குக் கல்வி அமைச்சர் இணக்கம் தெரிவித்திருக்கிறார்,

கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் பற்றி அரசு தற்போது ஆராய்ந்து வருகிறது.

இலங்கையில் கூட்டுறவு துறையில் 33 சத வீதம் ஊழியர்கள் உள்ளனர். உத்தேச ஓய்வூதிய திட்டத்தினால் இவர்கள் அனைவரும் நன்மை பெறுவர்.

இப்படி மேல் மாகாண அமைச்சர் ஏ எம் யூசுப் தெரிவித்தார் (ந-வ)

## பஸ் டிப்போக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணிக்கவும தேசிய போக்குவரத்து கமிஷன் ஒன்று நிறுவப்படும். இக் கமிஷன் போக்குவரத்து அமைச்சினால் கூடிய விரைவில் நியமிக்கப்படும்.

மேலும் சுயமாக வேலையில் இருந்து ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு விசேட நஷ்டஈடும், ஊக்குவிப்பு கொடுப்பனவுகளும் வழங்கப்படும். இதுவரை 7,000 ஊழியர்கள் சுயமாக ஓய்வுபெற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

சுயமாக ஓய்வுபெறும் ஊழியர்கள் விரும்பினால் அவர்கள் தனியான பஸ்களை இறக்குமதி செய்வதற்கு விசேட கடன்களும் வழங்கப்படும்.

30 பிரயாணிகளுக்கு மேல் பிரயாணம் செய்யும் வாகனங்களை இறக்குமதி செய்பவர்களுக்கு இறக்குமதித் தீர்வை முற்றாக நீக்கப்படும். மொத்த விற்பனை வரி அறவிடப்பட மாட்டாது. இதேவேளை மூன்று வருட வரிச் சலுகையும் வழங்கப்படும். வாகனங்களை இறக்குமதி செய்யும் ஊழியர்களுக்கு 80 சதவீத வங்கிக் கடனும் வழங்கப்படும்.

இதே அடிப்படையில் தனியார் துறையினர் பஸ்களை இறக்குமதி செய்யும் போது தேசிய [illegible] சலுகைகளுடன் 75 சதவீத வங்கிக் கடனும் வழங்கப்படும்.

உலக வங்கியிடமிருந்து கிடைக்கவுள்ள 60 கோடி ரூபா [illegible] [illegible]

அமைச்சர் திரு விஜேபால மெண்டிஸ் இப்படித் தெரிவித்தார். [ண—ய]

## பாக்கிர் மாக்கார் பற்றிய நூல் வெளியீடு ஜூனில்

தென் மாகாண ஆளுநர் அல்ஹாஜ் எம் ஏ பாக்கிர் மாக்காரை பற்றிய தமிழ் நூல் ஒன்று வெளியிடப்படும்.

"பண்புயர் மனிதர் பாக்கிர் மாக்கார் எதிரணியினரின் நடுநிலைப் பார்வை" என்ற தலைப்பில் கவிஞர் ஏ இக்பால் இந்த நூலை எழுதி உள்ளார்.

ஜூன் 9 ஆம் திகதி இந்த நூலின் வெளியீட்டு விழா நடைபெறும். (ந-007)

## புலிகள் தமது...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பேச்சுக்கே இடமில்லை.

### பேச்சுவார்த்தை

"எந்த ஒரு குழுவுடனும் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என்று கூற புலிகளுக்கு அதிகாரம் இல்லை.

வடக்கு கிழக்கில் சுமார் ஏழு குழுக்கள் இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் ஒற்றுமைப் படுத்துவதே அரசின் நோக்கம்"

இப்படி அவர் கூறினார்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் புலிகள்தான் என்று கூறப்படுகிறதே என்று நிருபர்கள் சுட்டிக்காட்டிய போது அமைச்சர்:—

"புலிகள் தானே கூறித் திரிகின்றனர். அதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் பொது மக்கள். ஆயுதங்களைக் கைவிட்டு பொதுமக்கள் முன் வந்து தேர்தலின் மூலம் அதைப் புலிகள் நிரூபிக்க வேண்டும்"

"துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு நாமே ஏகப் பிரதிநிதிகள் என்று கூறுவதை எவரும் ஏற்க மாட்டார்கள்" என்றார்.

"இது அறியாமை" என்று குறிப்பிட்ட அமைச்சர் வடக்கு கிழக்கு மாகாணம் தனி நாடு இல்லையே! அதுவும் இலங்கையின் ஒரு பகுதிதான் என்பதைப் புலிகள் புரிந்துகொள்ள வேண்டும்" என்றார்.

### ஈ பி ஆர் எல் எப் பயிற்சி

ஈ பி ஆர் எல் எப் இயக்க உறுப்பினர்களுக்கு இலங்கை இராணுவம் பயிற்சி அளிக்கின்றது என்று டாக்டர் அன்டன் பாலசிங்கம் கூறுவது பற்றிக் கேட்டபோது அது "நான் சென்ஸ்" என்று கண்டித்தார் அமைச்சர்.

பாதுகாப்புப் படைகளில் 12.5 சதவீத இலங்கைத் தமிழர்களையும் 5.5 சதவீத மலையகத் தமிழர்களையும் 7 சதவீத முஸ்லிம்களையும் சேர்த்துக்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

இதுவரை 7000 தமிழர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் 125 மலையகத் தமிழ் இளைஞர்களுக்குப் பொலீஸ் பயிற்சி அளிக்கப்பட்டு சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்

மலையக மக்கள்

## நாளை அகில...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடைபெறும்.

இந்த சமயம், இந்த கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் அமைச்சர் திரு எஸ் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்குவார்.

முதற்தடவையாக இந்த சமய இந்து கலாசார ராஜாங்க அமைச்சின் [illegible] அகில இலங்கை ரீதியில் இந்து சமயப் போட்டிகளை நடத்தியது. 17 மாவட்டங்களில் 26 பரீட்சை நிலையங்களில் ஒன்று பிரிவுகளாக இப்போட்டிகள் நடத்தப்பட்டன.

பாடசாலை அறநெறி பாடசாலை என்பவற்றில் இருந்து சுமார் 2,600 மாணவர்கள் இப் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

இவற்றின் இறுதிப் பரீட்சையே நாளை 26 ஆம் திகதி கொழும்பில் நடக்கப்படவிருக்கிறது.

அகில இலங்கை ரீதியில் தெரிவான 27 பேருக்கும் மாவட்ட ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 459 பேருக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். [ண—ர]

## போபர்ஸ்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

திரு விஸ்வநாத் பிரதாப் சிங் இந்தியாவின் புதிய பிரதமராக பதவியேற்ற பின்னர் இந்த போபர்ஸ் ஆயுத ஊழல் விவகாரம் சூடு பிடித்தமை தெரிந்ததே.

இந்த ஊழல் தொடர்பான இரகசிய ஆவணங்களை சுவீடன் இந்தியாவுக்கு அனுப்பி வைத்திருக்கிறது என்று அகில இந்திய வானொலி நேற்று செய்தி ஒலிபரப்பியது. [ண—வ்]

## இராணுவம்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு அவர் மேலும் பேசியதாவது:—

அரசாங்கத்தோடு பேசிக் கொண்டிருக்கும் புலிகளை நம்பிக்கை இழக்கச் செய்துவிட்டீர்கள். அரசாங்கம் நீதியாக நடக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது எனவே அரசாங்கம் நம்பிக்கை ஏற்படுத்த முயல வேண்டும்.

இந்த நாட்டில் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு லட்சம் இந்திய வம்சாவளி மக்களை நாடு கடத்த இந்த அரசு எடுத்த முடிவு மனிதாபிமானமற்ற செயல் மட்டுமல்ல ஜனநாயக விரோத செயல் என்பதை எவரும் மறந்து விட முடியாது.

[illegible] அரசுடன் பேச்சு நடத்தி தீர்வு காண முயல வேண்டும். அதாவது சகல குடிமக்களும் வாழ வழிவகுக்க வேண்டும்.

6 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை எதற்காக கொண்டு வந்தீர்கள்? ஜனநாயக ரீதியாக குரல் கொடுத்த எமது (த வி கூ) நாடாளுமன்றத்திற்கு [illegible] இதனை கொண்டு வந்தீர்கள்.

த வி கூ அதனை அன்று வன்மையாக கண்டித்தது. இன்று [illegible] தாற்பரியங்களையும், விளைவுகளையும் அரசாங்கம் உணர்ந்துள்ளது.

6 ஆவது திருத்த சட்டத்தை நீக்கினால் மட்டும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று கொள்ள முடியாது.

தமிழ், சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழலாம். அது இணைப்பு ஆட்சி மூலம்தான் ஏற்பட வேண்டுமேயொழிய ஒற்றையாட்சி மூலமல்ல.

இவ்வாறு திரு சேனாதிராஜா கூறினார்.

ஐ தே க வைச் சேர்ந்த அக்கரவத்த செனவிரட்ன பேசுகையில்:—

தமிழர் பிரச்சினையை நியாயமான முறையில் தீர்த்திருந்தால் இரத்த வெள்ளம் ஓடும் நிலை ஏற்பட்டிருக்காது என்றார்.

இந்தியாவுடன் [illegible] நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டுதான் நாம் செயற்பட வேண்டும் என்றும் அவர் சொன்னார். [ண—கு]

## வடக்கு, கிழ...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

எடுத்திருக்கிறது?

சாம் தம்பிமுத்து, கலா தம்பிமுத்து, ரிச்சர்ட் சொய்ஸா இன்னும் பல பத்திரிகையாளர்களின் கொலைகள் இந்த நாட்டின் மனித உரிமை மீறலையே காட்டுகின்றன.

இலக்கம் இல்லாத வாகனங்கள் பல இன்று ஓடுகின்றன. அவற்றைக் கண்டுபிடிக்காமல் இருப்பது ஏன்?

அரசின் சகல நடவடிக்கைகளும் தோல்வி கண்டு விட்டன. மனித உரிமை மீறலை மக்கள் எதிர்க்கிறார்கள் என்பதை அரசு உணர வேண்டும்.

இவ்வாறு திரு குணரத்ன கூறினார். [ண—கு]

## அரச ஊழியர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் இணைக்கப்படும்.

அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள சிபார்சுகளுக்கு இணங்க தினசரி வேலை நாட்களின் கால எல்லையை 45 நிமிடங்களால் அதிகரிப்பதற்கும் அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

உலகிலேயே வேறு எந்த ஒரு நாட்டிலும் அரசாங்க ஊழியர்களுக்கு அதிக எண்ணிக்கையான விடுமுறைகள் வழங்கப்படுவதில்லை. அரசாங்க ஊழியர்களுக்கான விடுமுறை தினங்களை அதிகரிப்பது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அரசுக்கு சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. [ண—வ]

இன்றைய திரைகளில்

2 வது வாரம்

முருகன் (ஜிந்துப்பிட்டி) 2-15, 6-15, 9-15 சனி/ஞாயிறு 10-15

ஈரோஸ் (பாமன்கடை) 2-30, 6-00, 9-30 சனி/ஞாயிறு 10-30

சுபராஜ் (மட்டக்களப்பு) 10-30, 2-30, 6-00, 9-30

இன்று முதல்!

செல்லமஹால்

ஹஜ்

1990

# ஹஜ்
# யாத்திரை–1990

இன்ஷா அல்லாஹ்! இவ்வருடம் எமது நிறுவனம் ஹஜ் வேலைகளை மேற்கொள்ளவுள்ளது- சிறந்த குளிரூட்டப்பட்ட தங்கும் வசதிகளுடனும் போக்குவரத்து வசதிகளுடனும் ஹரமிற்கு மிக அருகாமையில் பாலைவன குளிரூட்டிகள் மினா/அரபாவில் வசதிகள் செய்து தரப்படும்.

பல வருட அனுபவமுள்ள மௌலவிகளுடன் ஜூன் மாத 3 ஆம் வாரத்தில் பயணத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்-

மௌலவி எஸ் எச் ஆதமபாவா (மதனி)
ஈஸ்டர்ன் அரபுக் கல்லூரி,
அட்டாளச்சேனை (தொலைபேசி 067/2515)

மௌலவி எம எச் எம புர்ஹான் (பஹ்ஜி)
தொலைபேசி 045/4276 (மடவளை/கஹவத்த)

மௌலவி எம ஜே எம அஜ்வாத் (பஹ்ஜி)
(தலைவர், நிர்வாக சபை, பெரிய பள்ளி அக்குறணை)

இல 88/1, மாத்தளை ரோட், அக்குறணை

அல்-உஸ்வதுல் ஹஸனஹ் அரபிக் கல்லூரி, மாய்வெல - மெல்சிரிபுர.

ஹாஜி ஏ எம எம பஸாஹிர்
பண்டாரவளை
(தொலைபேசி 057/2548, 057/2424)

**M. M. SHA NAWAZ**
**S. N. F. TRAVELS & TOURS**
F 58. People's Park
Colombo — 11
Telephone: 435906 433422


ரு ஏற்க மாட்டார்கள் என்றார்-

மலையக மக்கள்

"இலங்கை அரசு இந்தியப் பாஸ்போர்ட் பெற்ற தொழிலாளர்களை நாடு கடத்தினால் அவர்களை வடக்கு, கிழக்கு மாகாணத்தில் குடியமர்த்தத் தயார் என்று புலிகள் கூறியிருக்கிறார்கள்- மலையக மக்களுக்காக வடக்கு, கிழக்கில் ஹர்த்தால் ஒன்றையும நடத்தி உள்ளனரே?" என்ற நிருபர்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்-

## ஜனாதிபதி...

[1ஆம பக்கத் தொடர்ச்சி]

ஜனாதிபதியின் சுற்றுப் பயண விவரம வருமாறு:-

மே 26 ஆம திகதி காலை 9-30 மணிக்கு கண்டிக்கு விஜயம செய்யும ஜனாதிபதி திரித்துவக் கல்லாரி மண்டபத்தில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவார்.

27 ஆம திகதி காலை 9-30 காபஹா பண்டாரநாயக்க வித்தியாலய மண்டபம. மாலை நான்கு மணிக்கு கொழுமபு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம.

ஜூன் 3 மாலை நான்கு மணி - குருநாகல் நவ மண்டபம.

ஜூன் 9 காலை 9-30 - பொலன்னறுவை தாவல மந்திரைய.

ஜூன் 10 காலை 9-30 - மாத்தறை ராகுல வித்தியாலயம. மாலை மூன்று மணிக்கு காலி நகர மண்டபம.

ஜூன் 17 காலை 9-30 - அம்பாறை ஹார்டி நிலையம

ஜூன் 25 காலை 9-30 - மாத்தளை வை எம பிஏ.

ஜூன் 27 காலை 9-30 - பொலன்னறுவை நகர மண்டபம.

ஜூன் 29 காலை 9-30 - அனுராதபுரம் வை எம பி ஏ.

இரத்தினபுரி இளைஞர் கவுன்சில் மண்டபம. (ண-032)

சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்-

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களுக்கே எமது இராணுவத்தினர் பயிற்சி அளிக்கின்றனர்-

புலிகளையும் பாதுகாப்புப் படைகளில் வந்து சேருமாறு அழைப்பு விடுத்துள்ளோம்- இப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கூறினார்-

[உ—ய]

## ஈ.பி. ஆர் எல்...

[1ஆம பக்கத் தொடர்ச்சி]

படுவதற்கு முன்னரே புலிகளுக்கும் ஜே வி பி யினருக்கும் அழைப்பு விடுத்தோம். எமது அழைப்பை ஏற்று புலிகள் பேச்சுவார்த்தைக்கு வந்தனர். எனவே அவர்களுடன் பேசுவதில் தவறு ஒன்றும இல்லையே?

கே- வடக்கு கிழக்கு மாகாணத்தில் புலிகளின் செயற்பாடுகள் குறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்?

ப- அவர்களுடன் சண்டை பிடிக்க வேண்டும் என்கிறீர்களா? இது பற்றி புலிகளின் உயர்மட்ட தலைவர்களிடம் அறிவிக்கப்பட்டுள்ளது- கீழ் மட்ட உறுப்பினர்களின் செயலைக் கண்டித்துள்ளதோடு அவர்களை ஒழுங்குபடுத்தும்படியும புலிகளிடம் கேட்டுள்ளோம-

[ண—ய]

## சடலம் மீட்பு...

[1ஆம பக்கத் தொடர்ச்சி]

தமிழ்த் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படும இவரின் சடலம் சிற்றாறு பகுதியில் புதைக்கப்பட்டிருந்தது. இவரது மார்பில் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இவர் தெஹிவத்தையைச் சேர்ந்த எஸ் ஏ சந்திரதாச என்பவர் என அடையாளம காணப்பட்டுள்ளார். (ண-ர)


செல்லமஹால்
(கொட்டாஞ்சேனை)
2-30, 6-00, 9-30

கொன்கோட்
(தெகிவளை)
10-30, 2-00, 6-00, 9-00

மனோகரா
(யாழ்நகர்)
10-30, 2-00, 6-00, 9-00




ஏ வி எம்மின்
ராஜா சின்ன ரோஜா
(கலர்)

சுபராஜ்
(மட்டக்களப்பு)
10-30, 2-30, 6-00, 9-30

பயங்கர சண்டை காட்சிகள் இனிமையான பாடல்கள் நிறைந்த சித்திரம

அர்ஜூன் — சசிகலா
சீதா — செந்தில்
பேபி ஷாலினி — சரத்பாபு
நடித்த
சங்கர் குரு
(கலர்)

7 வது வாரம
ஜெஸிமா
[கிராண்ட்பாஸ்]
2-00, 6-00, 9-30

வின்சர்
[யாழ்நகர்]
10-30, 2-30, 6-00

பாக்யராஜ் — ஷோபனா
சோமயாஜுலு — மனோரமா
குமரிமுத்து நடித்த
இது நம்ம ஆளு
[கலர்]

8 வது வாரம
சமந்தா
(கொட்டகொடை)
10-00 2-00 6-00, 9-30

பிரின்ஸ்
(ஹட்டன்)
2-30 6-00
சனி/ஞாயிறு 10-30

ஸ்ரீதர்
(யாழ்நகர்)
10-30 2-30 6-30

ரஜனிகாந்த் — ராதிகா
நடித்த
சத்யா மூவிஸ்
ஊர்க்காவலன்
(கலர்)

பெற்றோர்களிடமும், தோழிகளிடமும்

# சவால் விட்டு நடிப்பில் சபாஷ் பெற வந்த நாயகி!

அண்மையில் புதுமுக வரிசையில் அறிமுகமாகியுள்ள நடிகை ரத்னாவை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது அவருடன் உரையாடியதில் கிடைத்த தகவல்கள் சில இதோ:-

"நீங்கள் நடிக்க வந்ததற்கு உங்கள் பெற்றோர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லையா?

நடிக்க சான்ஸ் வந்ததும் பம்பாய் சென்று பெற்றோர்களிடம் சொன்னேன். அவர்களும் வழக்கம் போல் சத்தம் போட்டார்கள்.

"எனக்கு நடிகை ஆகத்தான் விருப்பம். என் லட்சியம் நடிப்பு... நடிப்பு" என்று கூறினேன். "உன் இஷ்டம்" என்று சொல்லி விட்டார்கள். அதனால் நான் சென்னை வந்து, மாமா - அத்தையுடன் தங்கி இருந்து நடித்து கொண்டு இருக்கிறேன்-

நான் சென்னை புறப்பட்டு வரும் போது என் பெற்றோர்களிடமும், தோழிகளிடமும் "நான் இப்போது வெறும் "ரத்னா"வாக சென்னை செல்கிறேன். ஆனால் இனி பம்பாய் திரும்பி வரும் போது ஒரு புகழ் பெற்ற நடிகையாக - நீங்களே பாராட்டும் அளவுக்கு தான் வருவேன். இல்லையென்றால் பம்பாய்க்கு வரவே மாட்டேன்." என்று சவால் விட்டு விட்டுத் தான் வந்தேன்" என்றார் உறுதியுடன்.

"சவால் நிறைவேறி வருகிறதா?"

ரத்னா அழகாக சிரித்தார்.


"நான் நினைத்து வந்ததை விட எனக்கு வரவேற்பு நன்றாகவே இருக்கிறது.

தமிழ் திரைவானில் புதிய கதாநாயகிகளை அறிமுகப் படுத்தி வரும் நடிகர் ராமராஜன் சாருடன் ஒரு படத்தில் கதாநாயகியாக நடிக்கும் அதிஷ்டம் வந்திருக்கிறது-

ராமராஜன் சாரும் அவரது மனைவி நளினியும் என் மாமாவுக்கு மிகவும் அறிமுகம் ஆனவர்கள். "நான் சினிமாவில் நடிக்கிறேன்" என்று தெரிந்ததும் ராமராஜனும் நளினியும் என்னை வரச்சொல்லிப் பார்த்தார்கள்.

நளினி அக்காவுக்கு என்னைப் பார்த்ததும் பிடித்து விட்டது- என்னை நடிக்கச் சொல்லியும் பார்த்தார்கள்.

தங்கை வேடத்துக்காக என்னை அழைத்தவர்கள்



ரத்னா

இருக்கிறார்கள். இப்போதைக்கு ராதாபாரதி டைரக்ஷனில் "நெஞ்சை தொட்டு சொல்லு" படத்திலும் வி சேகர் டைரக்ஷனில் "வீர வாள்" என்ற படத்திலும் நடிக்க ஒப்புக் கொண்டு இருக்கிறேன். மற்ற படங்களுக்கு பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது-

பம்பாயில் இருந்து இங்கு வந்த நடிகைகள் சோடை போனதே இல்லை. பூர்ணிமா, நதியா ரூபினி குஷ்பு என்று அனைவருமே முன்னணி நடிகைகளாகத் தான் திகழ்ந்து இருக்கிறார்கள்,

அதுபோல் தமிழ்ப்பட உலகில் புதியவளாக புகுந்திருக்கும் நானும் ரசிகர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று முன்னணி நடிகை ஆவேன்... "சபாஷ்" பெறுவேன்"

இவ்வாறு கூறினார் நடிகை ரத்னா-

"அது சரி... அதென்ன ரத்னா... பழைய பெயர் மாதிரி?"

"டைரக்டர் பாரதிராஜா படத்தில் நடிக்க எனக்கு மிகவும் ஆசை உண்டு. அவரது ரசிகை நான். ஆனால் அவரிடம் எனக்கு அறிமுகம் இல்லை.

அவர் "ஆர்" வரிசையில் தான் நடிகைகளை அறிமுகப் படுத்துவார்- அவர் படத்தில் நடிக்க துடித்த எனக்கு அதற்குள் வேறு படத்தில் நடிக்க "சான்ஸ்" வந்து விட்டது-

ஆனாலும் என்ன? துரோணாச்சாரியாரை மனதில் நினைத்து ஏகலைவன் வில் வித்தை கற்ற மாதிரி, அவரது ஆசியை மனதில் நினைத்துதானே "ஆர்" வரிசையில் ரத்னா என்ற பெயரை தேர்ந்தெடுத்தேன்.

ரத்னா பெயர் வைத்த நேரம் நல்ல நேரமே. அதற்குள் நாலு படம் வந்து விட்டதே!" என்று மகிழ்ச்சியுடன் கூறிய ரத்னா ஒரு பிளஸ் டூ மாணவி. தமிழ், ஆங்கிலம் இந்தி மராத்தி கன்னடம் ஆகிய 5 மொழிகளில் பேசத் தெரிந்தவர். (இ-10)



தையைக் காலைப் பிடித்தாவது தநுகள் தேவைகளை

கொழுந்து உற்பத்தி அதிகரித்திருந்தால்

# சிறுதேயிலைதோட்டங்கள் பசளை வாங்க நிதி உதவி

கொழும்பு, மே 24

சிறு தேயிலை தோட்டங்களின் கொழுந்து உற்பத்தி அதிகரித்துக் காணப்பட்டால் பசளை கொள்வனவுக்காக அவைக்கு ஊக்குவிப்பு பணம் வழங்கப்படும்.

தேயிலை உரத்தின் விலை அதிகரித்துள்ளதால் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டே இத் திட்டத்தை அமுல் நடத்த தோட்டத் தொழிற்றுறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேசத்திலும் சிறு தேயிலைத் தோட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கு பசளை கொள்வனவின் பொருட்டு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும்.

இத்தகவலை தோட்ட சேவைகள் திட்ட அமைச்சர் ஜனாப் எம் எல் எம் அபுசாலி தெரிவித்தார்.

மத்திய, ஊவா, சப்ரகமுவா மாகாண சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களை எடுத்துக் கொண்டால் அவர்களில் பெரும்பாலானோர் வறுமைக் கோட்டுக்குக் கீழேயே வாழ்ந்து வருகிறார்கள். உர விலை அதிகரித்திருப்பதால் தமது தோட்டங்களுக்கு உரமிட முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர். இவர்களுக்கு உதவும் வகையிலேயே இவ் ஊக்குவிப்புத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

நாட்டில் ஒரு லட்சத்து 58 ஆயிரத்து 900 சிறு தேயிலைத் தோட்டங்களும் 176 சிறு தோட்ட உரிமையாளர் சங்கங்களும் உள்ளன. புதிய ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் உற்பத்தி அளவை கணக்கிட்டே ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும்.

கடந்த ஆண்டு அல்லது எதிர் வரும் ஜூலை முதலாம் திகதி முதலான 12 மாத காலப் பகுதியில் சிறு தேயிலை தோட்டங்கள் உற்பத்தி செய்துள்ள கொழுந்தின் அளவு, அதற்கு முற்பட்ட 12 மாத கால உற்பத்தியுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும்.


முந்திய காலப் பகுதியைவிட ஐந்து சதவீத கொழுந்து உற்பத்தி அதிகரித்திருக்குமானால் அத்தோட்டம் ஊக்குவிப்புத் தொகையை பெறுவதற்கான தகுதியைப் பெறும்.

இப்படி இத்திட்டம் பற்றி விளக்கம் அளித்த திட்ட அமைச்சர் ஒவ்வொரு பிரதேசத்திலும் பத்து சிறந்த சிறு தேயிலை தோட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு ஊக்குவிப்புப் பணம் அவற்றிற்கு வழங்கப்படும் என்றார்.

சிறு தேயிலைத் தோட்டங்கள் ஐந்து சதவீதத்தால் தமது உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதால் கிடைக்கும் மேலதிக வருமானத்தில் இருந்து ஊக்குவிப்பு தொகைகளை வழங்கக் கூடியதாக இருக்கும் என்று இவர் சொன்னார்.

இருபது சிறந்த சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள், ஐந்து சிறந்த தேயிலை விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு பிரதேச உத்தியோகத்தர் ஆகியோரைத் தெரிவு செய்து தென் இந்தியா, கென்யா, இந்தோனேசியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாப் அபுசாலி கூறினார்.

(ரி-032)



## கண் சிகிச்சை முகாம்

நிந்தவூர் முஸ்லிம் மாணவர் சம்மேளனம் இலவச கண்சிகிச்சை முகாம் ஒன்றை அண்மையில் நிந்தவூரில் நடத்தியது.

சம்மேளனத் தலைவர் ஜனாப் எஸ் ஏ வகாப் தலைமையில் நிந்தவூர் வடக்கு ஆண்கள் பாடசாலை மண்டபத்தில் இந்த சிகிச்சை முகாம் நடைபெற்றது.

சிகிச்சை முகாமிற்குத் திரண்டு வந்த கண் நோயாளர்களை, டாக்டர் ஒருவர் பரிசோதிப்பதைப் படத்தில் காண்க,

சம்மேளனப் போஷகர் அல்ஹாஜ் ஏ அமீர்மேசா சம்மேளனத் தலைவர் ஜனாப் எஸ் ஏ வகாப் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (இ-217)

[படம்- ஏ எல் எம் சலீம்]

ஆசுகூடிய

புனித ஹஜ் யாத்திரை-
1990

சேஃப்வே டிரவல்ஸ் நிறுவனத்தின்
முதலாவது ஹஜ் விமானம்

இன்ஷா அல்லாஹ்

எதிர்வரும் 15-06-1990 காலை 8 மணிக்குப்

என்னை நடிக்கச் ... பார்த்தார்கள்.

தங்கை வேடத்துக்காக என்னை அழைத்தவர்கள் நேரில் என்னையும் என் நடிப்பையும பார்த்து வெகுவாக பாராட்டி "நீ கதாநாயகியாக நடி" என்ற வாய்ப்பு வழங்கி உள்ளனர்.

எதிர்பாராத இந்த மகிழ்ச்சியில் நான் அப்படியே திக்குமுக்காடிப் போனேன். என் கலை உலக வாழ்க்கைக்கு ஊக்கமும உற்சாகமும அளித்துள்ள ராமராஜனுக்கும், அவரது மனைவிக்கும நான் என்றென்றும நன்றி உடையவளாக இருப்பேன்.

ராமராஜனுடன் கதாநாயகியாக நடிக்கப் போகிறாள் என்ற செய்தி வெளியே தெரிந்ததும எனக்கு ஏகப்பட்ட வரவேற்பு.

பல பட நிறுவனத்தினர் என்னை தேடி வந்த வண்ணம

தையைக் காலைப் பிடித்தாவது தஙகள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் பெண்கள் வல்லவர்கள் தான் இங்கே இவளுக்கும ஏதோ தேவைதான் போலல்லவா தெரிகிறது.

(சிவகுமார் — சுலக்சனா)

[படம- நீ சிரித்தால் தீபாவளி]

(இ-10)

# புதுமுகங்களின்

## 'வைகாசி பொறந்தாச்சு'

ராமராஜன் நடிக்கும "தங்கத்தின் தங்கம", அர்ஜுன் நடிக்கும் "பெரிய இடத்துப் பிள்ளை" ஆகிய படங்களைத் தயாரித்து வரு கே பிரபாகரன் புதிய படம் ஒன்றை உருவாக்குகிறார்- "வைகாசி பொறந்தாச்சி" என்பது அதன் பெயர்-

புது இயக்குநர் ராதாபாரதி இதன் மூலம் அறிமுகமாவதோடு கதை வசனத்தையும் எழுதுகிறார். பாடல் பதிவுடன் இதன் துவக்கு விழா ஏவி எம்மில் நடைபெற்றது.

இசை அமைப்பவர் தேவா.

புதுக் கதாநாயகன் - கதாநாயகி அறிமுகமாகவிருக்கும் இதில் கவுண்டமணி, செந்தில். வினுச்சக்ரவர்த்தி, ஆனந்தராஜ், சுலக்ஷனா ஆகியோருடன் தயாரிப்பாளர் கே பிரபாகரனும் நடிக்கிறார்-

இயற்கை எழில் சிந்தும் நாகர்கோவில், குற்றாலம், மற்றும குமரி மாவட்டப் பகுதி ஆகியவற்றில் படம் வளர உள்ளது-

[இ—10]

# விஜய் நடிக்கும்

## "கேப்டன் பிரபாகரன்"



விஜயகாந்த்

"புலன் விசாரணை" படத் தயாரிப்பாளர்கள் புதிதாக சினிமாஸ்கோப்பில் தயாரிக்கும படம் "கேப்டன் பிரபாகரன்" இதில் விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கிறார்-

ஐ வி சினி புரொடக்ஷன்ஸ் சார்பில் ஆர் சுந்தரராஜன் எஸ் ரவீந்திரன் ஆகியோர் தயாரித்த 'புலன் விசாரணை" படம தமிழ்நாடு முழுவதும் வசூலில் சாதனை புரிந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டு இருக்கிறது அல்லவா ?

அடுத்து ஐ வி சினி புரொடக்ஷன்ஸ் சார்பில் "கேப்டன் பிரபாகரன்" என்ற புதிய படம் சினிமாஸ்கோப்பில் தயாரிக்கப்படுகிறது-

கதை, திரைக்கதை எழுதி ஆர் கே செல்வமணி டைரக்ட் செய்கிறார்- லியாகத் அலிகான் வசனம் எழுதுகிறார்-

இளையராஜா இசை அமைக்கிறார்-

**தினபதி சினிமா**

இதில் காட்டிலாகா அதிகாரியாக வித்தியாசமான வேடத்தை விஜயகாந்த் ஏற்று நடிக்கிறார்-

[இ—10]

முந்திய தாலப் பகுதியைவிட

# ஆகக்கூடிய புள்ளிகள் பெற்றவர்களுக்கு புலமைப்பரிசில்

திருகோணமலை, மே 23

உயர்தர பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகும மூன்று மாணவர்களுக்கு வருடாவருடம புலமைப் பரிசில் வழங்க திருமலை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம முன்வந்துள்ளது.

இத்தீர்மானத்தை கூட்டுறவுச் சங்க விசேட பொதுக் கூட்டத்தில் பொதுச்சபை எடுத்துள்ளது.

அண்மையில் தலைவர், ஜி கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட இத்தீர்மானத்தின்படி வருடாவருடம திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட மூன்று மாணவர்களுக்கு இப் புலமைப்பரிசில் வருடந்தோறும வழங்கப்படும.

உயர்தர பரீட்சையில் கூடிய புள்ளிபெற்ற ஏழை மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் உயர்படிப்பு முடியுமவரை இப்புலமைப் பரிசில் வழங்கப்படும.

இதில் கூட்டுறவுத்துறை ஊழியர்களின் பிள்ளைகளிடையே திறமைச்சித்தி பெற்ற ஒருவருக்கு முன்னுரிமை வழங்கப்படும.

இதேவேளை ஊழியர்களுக்கான புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் இந்தியாவுக்கு வருடா வருடம சென்று பயிற்சிகள் பெற புலமைப்பரிசில்களை ஊழியர்களுக்கு வழங்கவும தீர்மானிக்கப்பட்டுள்ளது.

— (ரி-287)


## எதிர்வரும் 15-06-1990 காலை 8 மணிக்குப் புறப்பட உள்ளது

ஹாஜிகள் அனைவரும காலை 5-00 மணிக்கு
கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் சமுகமளிக்குமாறு
வேண்டப்படுகின்றனர்

இன்ஷா அல்லாஹ் ஹாஜிகள் அனைவரும எதிர்வரும 17 - 7 - 1990 அன்று ஜித்தாவிலிருந்து புறப்பட்டு பி. ப 10-00 மணியளவில் (இரவு) இலங்கையை வந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லும ஹாஜிகளுக்கு முன்னைய வருடங்களைப் போலவே இவ்வருடமும அனுபவமும, திறமையும வாய்ந்த மௌலவிகள், மார்க்க அறிஞர்களது வழிநடத்தலுடன் முஸ்லிம சமய, கலாசாரத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள எமது நிறுவனம, குறைந்த செலவில் நிறைந்த வசதிகளை வழங்க முன்வந்துள்ளது.

(1) புனித மக்காவில் ஹரம ஷரீபிலிருந்து மிக அருகாமையில் "பாபுல் ஹிஜ்ரா" எனும வாசஸ்தலத்துக்கு முன்பாக தங்குமிட வசதி ஏ/சியுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(2) மினாவில் தங்குமிடத்தில் குளிரூட்டல் (Air Cooler) வசதி செய்யப்பட்டுள்ளது.

இன்னும குறிப்பிட்ட ஆசனங்களே உள்ளன. உங்களுக்குத் தேவையான விவரங்களையும, ஆசனப் பதிவுகளையும செய்து கொள்வதற்குத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள் வருமாறு:

அல்ஹாஜ் எம ஆர் எம பாரூக் ஜே பி
தொலைபேசி — அலுவலகம: 546715, 27161, 23183
வசிப்பிடம: 699410, 686388

அல்ஹாஜ் மௌலவி எச் சலாஹுதீன் (பாரி)
பேஷ் இமாம, ஹனபி மஸ்ஜித், கண்டி
தொலைபேசி: 08/32039, 24193

அல்ஹாஜ் மௌலவி ஏ எல் எம கலீல்
பீ. ஏ. (மதீனா)

அல்ஹாஜ் ஏ எம எம மன்சூர்
பீ ஈ டி; எம ஏ (இஸ்லாமியக் கல்வி)
வெலமபொட

அல்ஹாஜ் மௌலவி எம வை உபைதுல்
ரஹ்மதுல்லாஹ் ஸ்டோர்ஸ், கிண்ணியா.

அல்ஹாஜ் மௌலவி என் எம மன்சூர் (உப அதிபர்)
மத்ரதுல் ஹிலால், நீர்கொழுமபு

**SAFEWAY TRAVELS & TOURS**

185 Old Moor Street
Colombo — 12
Telephone 546715, 27161, 23183

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல- 1613

சுடர் 18 கதிர் 4492
— 1990 மே 25 —

# அனுஷ்டான முறைப்படி மந்திரம் ஜெபித்தல்

## அதில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு பூரண பலன் என்பது இந்து தர்மம்

மந்திரம் என்பது மிகவும் விசேஷமானது- மிகவும் ரகசியமானது-

அதனால் அதை வெளிப்படையாகச் சொல்வதில்லை- உபதேசம மூலமாகவே கற்க வேண்டும-

மானது என்பதை இதனாலேயே புரிந்து கொள்ளலாம-

அது ஒன்று அல்லது பல அட்சரங்களைக் கொண்டது- ஒன்று அல்லது பல பதங்களைக் கொண்டது-

அட்சரச் சேர்க்கை, பத சேர்க்கை, சப்தபேதம - உச்

— வைரம் ராஜகோபால் —

உபதேசம செய்வதற்கும், உபதேசம பெறுவதற்கும அருகதை வேண்டும-

மந்திரத்தில் நம்பிக்கை வேண்டும- நம்பிக்கை இல்லையேல் மந்திரம பயன் தராது-

"என்ன சார்! பெரிய மூடுமந்திரமா? சொல்லுங்க சார்!" என்பார்கள்-

மந்திரம என்பது மிகு ரகசிய

சரிப்பு, எண்ணிக்கை ஆகியவைகள் முக்கியம-

மேலும மந்திரங்களை மனனம் செய்ய வேண்டும- வாய் திறந்து பிறருக்குக் கேட்கும்படி ஜெபிக்கக் கூடாது என்பார்கள்-

"மந்" என்றால் நினைத்தல் "த்ரா" என்றால் காப்பாற்றுதல் "மந்திரம" என்றால் "நினைப்பவனை காப்பாற்றுவது" என்று

பொருள் கூறியிருக்கிறார்கள்-

இந்த மந்திரத்தை மனனம செய்வதால் பாதுகாப்பு அளிக்கிறது-

"காயத்ரீ" என்ற சொல்லுக்கு "ஜெபிப்பவனைக் காப்பாற்றுவது" என்று பொருள் கூறுகிறார்கள்-

இந்த காயத்ரீ மந்திரம இதர மந்திரங்களை விட உயர்ந்தது என்று சொல்லப்பட்டுள்ளது-

இதை எவர் சிரத்தையுடன் தினமும அனுஷ்டான முறைப்படி ஜெபம செய்கிறாரோ அவருக்கு தேஜஸ் ஆயுள் ஆரோக்கியம எல்லாம விருத்தியாகிறது என்று சொல்லப்பட்டுள்ளது-

இப்படி இன்னும பல மந்திரங்களுக்கும பலவித சக்திகள் இருக்கின்றன என்றார்கள்.

சப்தங்களில் இரண்டு வகை உண்டு-

சில சப்தங்களுக்குப் பொருள் உண்டு- சில சப்தங்களுக்குப் பொருள் கிடையாது-

நெருப்பு எரியும போது, அலை

### வெள்ளி விருந்து

மோதுமபோது, காற்று வீசும போது, மண் சரியும போது ஏற்படும சப்தம (ஓசை) நமக்குக் கேட்கும-

ஆனால் அவைகளுக்கு பொருள் கிடையாது- நாம பேசுகிற பேச்சுக்களுக்கு பொருள் உண்டு-

அதே போல அட்சரமாக உள்ள மந்திரங்களுக்கும பொருள் உண்டு-

இந்த மந்திரங்களைப் புரிந்து கொண்டு சரியான முறையில்

உபதேசம செய்ய திறமை உள்ளவர்களே உபதேசம செய்யத் தகுதியுள்ளவர்களாவர்-

அவர்களையே "குரு" என்பர்

இதை சிரத்தையுடன் உபதேசம பெற்று நம்பிக்கையுடன் அப்பியாசம செய்பவர்களே சிறந்த சீடன் (சிஷ்யன்) என்பார்கள்-

சிரத்தையும் நமபிக்கையும இல்லாதவனுக்கு உபதேசம

செய்யக் கூடாது என்று ஒரு விதி உள்ளது-

ஆகவே மந்திரங்கள் என்பதும உண்மை- அதனால் பலன் கிடைக்கும என்பதும உண்மை-

ஆனால் தகுதி உள்ளவர் முறைப்படி தகுதியுள்ளவர்களுக்கு உபதேசம செய்து உபதேசம பெற்றவர் தகுந்த முறையில் மனனம செய்தால் அதற்கு நிச்சயம பலன் உண்டு என்றார்கள்-

இரண்டும சேர வேண்டுமே! சேர்ந்தால் நல்லது தான்!

(ம—10)

## உரத்தின் விலை குறைப்பு

உர வகைகளின் விலையை அரசாங்கம குறைத்திருக்கிறது.

ஒரு தொன்னுக்கு சுமார் ரூபா 600/- குறைக்கப்பட்டிருக்கிறது.

பொதுமக்களுக்கு அன்றாடம தேவைப்படும உணவுப் பொருள்கள் பலவற்றின் விலை ஓரளவிலேனும குறைவதற்கு இது வழி செய்யும.

உர விலைக் குறைப்பால் தேயிலை உற்பத்திச் செலவும கணிசமான அளவில் குறையும. அதனால் தேயிலை ஏற்றுமதி மூலம கிடைக்கும வருமானமும கூடுதலாக இருக்கும.

சில மாதங்களுக்கு முன்னர் உரத்துக்கு வழங்கிய மானியத்தை அரசாங்கம முற்றாக நிறுத்தியது. வெளிநாடுகளிலிருந்து என்ன விலைக்கு வாங்கப் படுகிறதோ அந்த விலையோடு சிறிது இலாபத்தையும வைத்து அரசாங்கம உரத்தை விற்று வந்தது.

இதை அடுத்து விவசாயிகள் பெரும கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்தன. அதன் விளைவாக வாழ்க்கைச் செலவுகள் உயரத் தொடங்கின.

அதனால் உர வகைகளின் விலை உயர்வை எதிர்த்து எங்கும குரல் எழுப்பப்பட்டது.

அரசாங்கம அந்தக் குரலுக்குச் செவிசாய்த்து இப்போது உர வகைகளின் விலையைக் குறைத்திருக்கிறது. அதற்காக அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிக்க வேண்டும.

அதே வேளையில் உர வகைகளின் விலை இன்னும குறைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும வலியுறுத்தியாக வேண்டும.

## புத்தளம் நகரசபை நூல் நிலையத்தில் அரச வர்த்தமானி

புத்தளம, மே 23

புத்தளம நகரசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும பொது நூல் நிலையத்தில் இது வரை காலமும அரசாங்க வர்த்தமானி பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படாதது குறித்து "தினபதி" அண்மையில் சுட்டிக்காட்டியது.

இதனை அடுத்து நகரசபை நிர்வாகம எடுத்த துரித நடவடிக்கை காரணமாக இமமாதம முதல் வர்த்தமானி பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

"தினபதி" வெளியிட்ட செய்தியின் பயனால் கைமேல் பலன் கிடைத்துள்ளது. இதன் மூலம பொதுமக்களும குறிப்பாக தொழில் தேடுவோரும பெரும பயன் பெற்றுள்ளனர். (ரி—241)

## மாவட்ட கூட்டுறவு வங்கி

திருகோணமலை, மே 23

வடக்கு, கிழக்குக்கென ஓர் மாவட்ட கூட்டுறவு வங்கி விரைவில் நிறுவப்படவிருக்கிறது-

இத் தகவலை வடக்கு, கிழக்குக் கூட்டுறவு ஆணையாளர் திரு வேலாயுதம்பிள்ளை தெரிவித்தார்-

அதிகாரப் பரவலாக்கலின் கீழ் மேற்படி வங்கி 1991 ஆம ஆண்டு இறுதிக்குள் நிறுவப்படலாமென அவர் தெரிவித்தார்-

[ஐ—287]

## மலையகத்தில் இசை, நடனத்துறைகளில் ஒரு வேகம் எழுந்துள்ளது

— தேவராஜ் பெருமிதம்

கொழும்பு, மே 24


"மலையகத்தில் ஆங்காங்கு" இசை, நடனத் துறைகளில் ஒரு வேகம எழுந்துள்ளதை காணக் கூடியதாக இருக்கிறது இதனை நாம எண்ணி திருப்திப்பட்டுக் கொள்ளாமல் இத் துறைகளிலே உள்ள நுட்பங்களை இன்னும கற்று துறைபோக வேண்டும-

இவ்வாறு நாவலப்பிட்டி பர்வதா நர்தனாலய நாட்டியப் பள்ளி நடன ஆசிரியைகள் பெற்

நிலைக்குப் பின் அண்மைய ஆண்டுகளிலே கலை வளர்ச்சி மேலோங்குவதை நாம காணக் கூடியதாக உள்ளது-

அதிலும பர்வதா நர்தனாலய நடனப் பள்ளியில் கலை முயற்சிகள் பெரிதும பாராட்டப்பட வேண்டியவை-

இவ்வகையில் நடனத் துறையிலே தன்னைப் போல ஒளிவிட்டுப் பிரகாசிக்க வேண்டுமென்ற ஆவலோடு நடன மாணவியர்



நிலத்தில் அமர்ந்து பயிலும் மாணவர்

## 12 ஆவது கம் உதாவ கிராம எழுச்சி திட்டத்துக்கு ரூ. 1 கோடி 20 லட்சம் செலவு

கண்டி, மே 23

குண்டசாலை, பல்லேகலையில் உருவாகி வரும 12 ஆவது கம உதாவ கிராம எழுச்சித் திட்டத்துக்கு இது வரை செலவிடப்பட்ட நிதி ஒரு கோடியே இருபது லட்சம ரூபாவாகும.

ஜனசக்தி கேந்திர நிலையமாக நிர்மாணிக்கப்பட்டுவரும இந்த வேலைத் திட்டத்தில் 90 சத வீதமான பணிகள் முடிவுற்றுள்ளன-

அப் பகுதியில் வாழும ஜன சக்தி உதவி பெறுபவர்களின் துணையுடன் ...

துங்க வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் ஜனாப் இமதியாஸ் பாக்கிர் மாக்கார் ஆகியோரால் கடந்த வாரங்களில் திறந்து வைக்கப்பட்டன-

இத் திட்டத்தையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகள் ஜுன் மாதம 23 ஆம திகதி தொடக்கம ஜுலை மாதம 3 ஆம திகதி வரை நடைபெற உள்ளன-

நெடுஞ்சாலைகள் புனரமைப்பின் விளைவாக கண்டி மாநகரம எழில்பெற உள்ளது-

கன்னொருவையில் இருந்து கண்டி வரை அமைக்கப்பட்டு வரும நெடுஞ்சாலை காரண ...

குறைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியாக வேண்டும்.

உர விஷயத்தில் நடந்து கொண்ட மாதிரியே அரசாங்கம் வேறு சில விஷயங்களிலும் எதிர்ப்புக் குரலுக்கு மதிப்புக் கொடுத்து தன்னுடைய முடிவுகள் சிலவற்றை மாற்றியிருக்கிறது.

உதாரணமாக ஊழியர் சேமலாப நிதியை மாதாந்த பென்ஷன் திட்டமாக மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வந்தது.

பென்ஷன் திட்டமாக மாற்றுவதால் ஊழியர்களுக்கு நன்மைக்குப் பதில் தீமையே ஏற்படும் என்று தொழிற் சங்கங்கள் பலவும் ஆட்சேபமும் எதிர்ப்பும் தெரிவித்தன.

அதையடுத்து அரசாங்கம் இப்போது ஊழியர் சேமலாப நிதியை மாதாந்த பென்ஷன் திட்டமாக மாற்றும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டது.

ஊழியர் சேமலாப நிதியில் ஊழியர்களின் கணக்கில் உள்ள தொகைகளுக்கு அரசாங்கம் 13 சத வீத வட்டி வழங்கி வந்தது.

அதை 1989 முதல் 11 சத வீதமாகக் குறைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அதற்கும் எதிர்ப்புக் கிளம்பியது. நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சரும் நிதி ராஜாங்க அமைச்சருமான திரு ஹெரல்ட் ஹேரத் ஊழியர் சேமலாப நிதி வட்டி குறைக்கப்பட மாட்டாது என்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இப்படி மக்கள் கருத்துக்கு மதிப்புக் கொடுத்த ஜனநாயக பாரம்பரியங்களுக்கு அமைய அரசாங்கம் நடந்து வருவது பெருமைக்கு உரியதும் பாராட்டப்பட வேண்டியதுமாகும்.

---

துறைபோக வேண்டும்.

இவ்வாறு நாவலப்பிட்டி பார்வதா நர்த்தனாலய நாட்டியப் பள்ளி நடன ஆசிரியைகள் பெற்றோர் ஆகியோருடனான கலந்துரையாடலில் கலந்து கொண்ட இந்து சமய, இந்து கலாசார, தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் பி பி தேவராஜ் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடல் நாவலப்பிட்டி இந்து கலாசார நிலையத்தில் நடைபெற்றது.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

நாவலப்பிட்டி என்றதுமே அத்துரலோகி என்ற எண்ணமா அத்துரலோகி நிலையம் பல்வேறு சமய சமூகத் தொண்டுகளை ... முன் ... தேக்க

...யிலே தன்னைப் போல ஒளிவிட்டுப் பிரகாசிக்க வேண்டுமென்ற ஆவலோடு நடன மாணவியரைப் பயிற்றுவிக்கின்ற ஆசிரியை சாந்தி ராமமூர்த்தி அவர்களை மனமாரப் பாராட்டுகின்றேன். இத்தகைய முயற்சிகள் மலையகத்தின் ஏனைய நகரங்களில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அவாவுறுகின்றேன் என்று குறிப்பிட்டார்.

இந் நடனப் பள்ளிக்கு அமைச்சர் காசோலை ஒன்றும் அன்பளிப்புச் செய்தார்.

(ஐ-ங)

---



## நிலத்தில் அமர்ந்து பயிலும் மாணவர்!

திருக்கோயில் கோட்டக் கல்விப் பிரிவைச் சேர்ந்த சாகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் பன்னெடுங்காலமாக தளவாடப் பற்றாக்குறை நிலவி வருகின்றது. மாணவர்கள் நிலத்தில் இருந்து கொண்டே தமது பாடங்களைப் பயின்று கொண்டிருப்பதை மேலேயுள்ள படத்தில் காண்க.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் கவனம் எடுப்பார்களா எனப் பெற்றோர் அங்கலாய்க்கின்றனர்.

[படம்: எம் ஏ பகுர்தீன்] [ஐ-035]

---

என.

அப் பகுதியில் வாழும் ஜன சக்தி உதவி பெறுபவர்களின் துணையுடன் முழு அளவிலான மனித வலுவும் இதன் பொருட்டுப் பெறப்பட்டுள்ளது.

66 வீடுகளைக் கொண்ட இந்த கமஉதாவ நிலப்பரப்பில் 12 தேசிய சின்னங்கள் அடையாளமாக நுழைவாயிலில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இத் திட்டத்தின் முன்னோடியாகத் தயாரிக்கப்பட்ட 6 வீடமைப்புத் திட்டங்கள் பதில் கட்டிட வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு சந்திரா ரண... எழுப்பப்பட்டுள்ளது.

கன்னொருவையில் இருந்து கண்டி வரை அமைக்கப்பட்டு வரும் நெடுஞ்சாலை காரணமாக பாதிக்கப்பட்ட தெய்யன்னேவெல, கஹகல்வரால, ஆகிய இடங்களில் வசிக்கும் மக்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

12 அவது கிராம எழுச்சிக் கொண்டாட்டங்கள் பாரிய அளவில் இடம்பெற்ற கொண்டாடப்படுகையில் ... 227 வீடுகள் ... தோருக்கு வழங்கப்பட்டுள்ளன.

[ஐ-017]

---

# காலத்தின் தேவைக்கேற்ப இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன

## கூத்து அரங்கில் ஆசிரியர்

புங்குடுதீவு மே 23

"காலத்தின் தேவையை ஒட்டி இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. போர்க் களத்தில் இலக்கியங்கள் தோன்றியுள்ளன.

இது தமிழ் இலக்கியத்தின் தனிப்பெரும் சிறப்பியல்பு. இந்த வகையில் ஈழத் தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்ட உணர்வை இந்திய இராணுவத்தின் அடக்கு முறையை "களத்தில் காத்தான்" சிந்து நடைக் கூத்து தெளிவாக புலப்படுத்திக் காட்டுகின்றது"

இவ்வாறு கூறினார் ஆசிரியர் திரு சு வைகுந்தநாதன்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவினரால் யாழ் மாவட்டத்தில் முதல் தடவையாக "களத்தில் காத்தான்" சிந்து நடைக்கூத்து அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோவில் முன்றலில் அண்மையில் மேடையேற்றப்பட்டது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே திரு வைகுந்தநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு த துரைசிங்கம் தலைமையில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது.

(ஐ—240)

---

## சமய நிகழ்ச்சி: முன்னுரிமை

ஏறாவூர், மே 23

அரசினர் பாடசாலைகளில் சமய நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை வழங்கவும் சமயத்துடன் மாணவர் பழக்க வழக்கங்களை இணைக்கவும் அன புதிய சமய அமுலாக்கத் திட்டமொன்றை சகல பாடசாலைகளிலும் அமுலாக்க கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று கல்வி ராஜாங்க அமைச்சினால் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

இத் திட்டத்தின் மூலம் அன்பு, சாந்நண்யம், சேவை மனப்பான்மை, கீழ்ப்படிதல், பெற்றவர்களை மதித்தல், இன்சொல் பேசுதல் ஆகிய நற்பழக்க வழக்கங்களை இளம் சிறார்களிடத்தில் பதிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுவதாக அச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ-073]

---

## சங்காபிஷேக தேர்த் திருவிழா

மஸ்கெலியா, மே 23

அட்டன் கழுகுவத்தை தோட்டம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய சங்காபிஷேகத் தேர்த் திருவிழா இன்று நடைபெறும்.

தொடர்ந்து நாற்பத்தெட்டு நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெற்றது.

அன்றைய தினம் அன்னதானமும் வழங்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை ஆலய பரிபாலன சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-408)

---

# ஹிங்குரானை ஆலையில் சீனி உற்பத்தி ஆரம்பம்

அக்கரைப்பற்று, மே 23

இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்தின் ஹிங்குரானை சீனி ஆலை இந்த ஆண்டிற்கான சீனி உற்பத்தியை அண்மையில் ஆரம்பித்து வைத்தது.

சீனி உற்பத்தி ஆரம்ப வைபவத்திற்கு இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு ஆனந்த குமாரசிறி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கரும்புப் பொட்டலம் ஒன்றை சாறு பிழியும் இயந்திரத்திற்குள் வீசி சீனி உற்பத்தியை ஆரம்பித்து வைத்தார்.

ஹிங்குரானை சீனி ஆலையின் எல்லையில் இந்த போகத்தில் மொத்தம் 4591 ஹெக்டர் நிலப்பரப்பில் கரும்புச் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் மொத்தம் 200,000 மெற்றிக் தொன் கரும்பு அறுவடை கிடைக்கும். எனவே இந்த வருட சீனி உற்பத்தி இலக்கு 15,400 மெற்றிக் தொன்னாகக் கணிக்கப்பட்டுள்ளது.

ஹிங்குரானை சீனி ஆலையின் புள்ளி விவர அறிக்கையில் இவ் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

சென்ற வருடம் 186,512 மெற்றிக் தொன் கரும்பை அறுவடை செய்து 14,256 மெற்றிக் தொன் சீனி உற்பத்தி செய்யப்பட்டது.

இந்த வருட சீனி உற்பத்தி 15,400 மெற்றிக் தொன்னாகக் கணிக்கப்பட்ட போதிலும் இந்த இலக்கை அடையலாமா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

வாக்குறுதியளிக்கப்பட்ட சில உரிமைகளும், சலுகைகளும் சீனி ஆலையில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு இன்னும் வழங்கப்படாமையால் அவர்கள் மனவிரத்தி அடைந்துள்ளனர்.

இதேவேளை கரும்புச் செய்கையாளர்கள் உயர்ந்து வரும் விலைவாசிகளை அடுத்து கரும்பின் விலையை உயர்த்துமாறு பல தடவைகள் வேண்டுகோள் விடுத்தும் இன்னும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் கரும்புச் செய்கையாளர்கள் பலர் தாம் சாகுபடி செய்த கரும்பை அறுவடை செய்வதா இல்லையா என்பதை இன்னும் தீர்மானிக்கவில்லை என்றும் அறிவிக்கப்படுகின்றது.

இது போன்ற காரணங்களால் கரும்பு அறுவடை வேலைகள் மந்தகதியிலேயே நடைபெறக் கூடியதாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கரும்பு அறுவடை வேலைகள் மே 7 ஆம் திகதி கல்முடு வலயத்தில் மதக்கிரிகைகளை அடுத்து ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஆனால் இதுவரை கரும்புச் செய்கையாளர்களினால் அறுவடை செய்யப்பட்ட கரும்புகளில் கணிசமான அளவு சாறு பிழிவதற்கு வந்து சேரவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

(இ-035)

ரஷ்யாவுடன்

# இணக்க முயற்சிக்கு லிதுவேனியா விருப்பம்

## சுதந்திர பிரகடனத்தை இடைநிறுத்த யோசனை

மாஸ்கோ, மே. 24

ரஷ்யாவிலிருந்து எண்ணெய் பெற்றுக்கொள்வதற்கும், கைத்தொழில் துறை சீர் குலைவதை தவிர்க்கு முகமாகவும் லிதுவேனிய குடியரசு ரஷ்யாவுடன் இணக்கத்துக்கு வரவிருக்கிறது.

லிதுவேனிய நாடாளுமன்றத்தில் அவசர அமர்வொன்றின் போது லிதுவேனியாவின் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்யும் சட்டவரைவினை இடைநிறுத்துவது பற்றி யோசிக்கப்பட்டது.

லிதுவேனிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது குறித்து ஆராய்ந்தனர். ரஷ்யாவுடன் நட்புறவை வளர்க்கும் விதத்தில் பேச்சு நடத்தப் போவதாக லிதுவேனிய அதிகாரி ஒருவர் தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

லிதுவேனியா கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி சுதந்திர பிரகடனம் செய்து கொண்டது. லிதுவேனியாவின் செயலைக் கண்டித்த ரஷ்யத் தலைவர் மிக்காயல் கொர்பச்சேவ் லிதுவேனியாவின் சுதந்திர பிரகடனம் உடனடியாக ரத்துச் செய்யப்பட வேண்டுமென அறிவித்தார்.

லிதுவேனியாவுக்கு எதிராக பொருளாதாரத் தடையொன்றும் கொண்டு வரப்பட்டது. லிதுவேனிய கட்டிடங்களில் இராணுவ ஆக்கிரமிப்பும் இடம் பெற்றன.

லிதுவேனியாவுக்கான எண்ணெய் விநியோகம் துண்டிக்கப்பட்டது. காஸ் விநியோகம் குறைக்கப்பட்டது.

இன்று வியாழன் முதல் அம்புலன்ஸ்களுக்கும், பொலீஸ் வாகனங்களுக்கும் ஈமக்கிரியைகளுக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கும் பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளது.

[எ]

## சின்னம்மைக்கு சிறுவர் பலி

நைஜீரியா, மே 24

நைஜீரியா போர்னோ மாநிலத்தில் 72 சிறுவர்கள் சின்னமுமை தொற்றி இறந்துள்ளனர்.

நைஜீரிய செய்தி ஸ்தாபனம் இதுபற்றி அறிவித்தது.

நோய் பரவாது தடுக்கும் முயற்சிகளில் சுகாதார அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

எ]

## பிஜியில் இருக்கும் இந்திய தூதரகத்தை உடன் மூட உத்தரவு

சூவா, மே 24


பிஜியின் தலைநகரான சூவாவில் இருக்கும் இந்தியத் தூதரகத்தை மூடிவிடும்படி உத்தரவிடப்பட்டு இருக்கிறது. 24 மணி நேரத்துக்குள் இந்தத் தூதரகம் மூடப்பட வேண்டுமென இந்தியாவை பிஜி கேட்டிருக்கிறது.

இந்தியா தொடர்ந்து பிஜிக்கு எதிரான நட்பற்ற போக்குப் பாங்கும் ஏற்படும் விதத்தில் செயல்பட்டு வந்ததாக பிஜி அரசு குற்றம் சாட்டியிருக்கிறது.

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவைப் பாதிக்கும் விதத்தில் வர்த்தகத் தடையொன்றினையும் இந்தியா ஏற்படுத்தியதாகவும் பிஜி கூறியிருக்கிறது.

பிஜி அரசாங்கம் எடுத்த முடிவு அறிக்கையொன்றின் மூலம் இந்தியாவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

[எ]



‘1992 எக்ஸ்போ- காட்சிக் கூடத்தின் அழகிய தோற்றம்’

“1992 ஆம் ஆண்டு எக்ஸ்போ” உலக வர்த்தகக் கண்காட்சி ஸ்பெயினில் செவிலி என்னுமிடத்தில் இடம்பெறவிருக்கிறது. கண்காட்சிக்கு வருவோரைக் கவரக்கூடிய காட்சிக் கூடமொன்றையே படத்தில் காண்கிறீர்கள்.

மேற்கு ஜெர்மனியின் புகழ்பெற்ற சீமன்ஸ் நிறுவனம் இந்தக் கூடத்தை “எக்ஸ்போ வாசலில் அமைத்திருக்கிறது.

இந்தக் கூடத்திற்கான தொழில்நுட்ப வசதிகள், மின் பொருத்த வேலைகள் பூர்த்தியானதும் கண்காட்சிக்கு வருவோரின் புகழ்ச்சிக்கு சீமன்ஸ் நிறுவனம் நிச்சயம் இலக்காகும் என கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

[எ-*ச]

## ரஷ்ய துருப்புகள் வெளியேற்றம்

பிராக், மே 24

செக்கோஸ்லவாக்கியில் இருந்த கடந்த மார்ச் மாதம் முதல் 22,501 ரஷ்ய துருப்புகள் வெளியேறியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ரஷ்ய துருப்பு வாபஸ் மார்ச் மாதமே ஆரம்பமாகியது. 530 தாங்கிகள், 859 இராணுவ வாகனங்கள் சுமார் 10 ஆயிரம் மோட்டார்கள் என்பன இதுவரை வெளியேறியுள்ளன.

[எ]

## நிதி உதவிக்கு அங்கீகாரம்

வாஷிங்டன் மே 23

நிக்கரகுவாவுக்கும் பனாமாவுக்கும் உதவி வழங்கும் திட்டத்தை அமெரிக்க காங்கிரஸ் அங்கீகரித்திருக்கிறது.

இதற்கமைய நிக்கரகுவாவுக்கு 30 கோடி டாலர்களையும் பனாமாவுக்கு 40 கோடி டாலர்களையும் அமெரிக்கா உதவி நிதியாக வழங்கும். (எ)

## உபஜனாதிபதி சர்மா நாடாளுமன்றத்தில் கண்ணீர் சிந்தினார்

புதுடில்லி, மே 24

புதுடில்லி நாடாளுமன்றம் கூடியவேளையில் எதிர்க் கட்சியினரின் கூக்குரலைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் இந்திய உப ஜனாதிபதி சங்கர் தயால் சர்மா கண்ணீர் வடித்தார்.

செவ்வாயன்று இச் சம்பவம் இடம்பெற்றது.

ராஜ்ய சபை கூடியபோது காங்கிரஸ் கட்சி (காங்கிரஸ் I) உறுப்பினர்கள் அரசாங்கத்தை எதிர்த்துக் குரல் எழுப்பினர்.

காஷ்மீர் அவாமி நடவடிக்கைக் குழுத் தலைவர் மிர்வாஸ் மௌலவி மொகமட் பாரூக் படுகொலைக்கு நாடாளுமன்றத்தில் மக்கிபத்துல் அளித்து அதுபற்றிப் பேச இடமளிக்கும்படி காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர்.

வழமையான “ஒரு மணி நேர கேள்வி நேரத்தை நீக்கும்படி எதிர்க் கட்சியினர் குரல் எழுப்பினர்.

அவர்களை அமைதியாக இருக்கும்படி உப ஜனாதிபதி சர்மா ...

## வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

மாஸ்கோ, மே 24

...

இன்ஷா அல்லாஹ்

ஸபாயா புஷ்ரா

SAPPHIRE BUSHRA

ஹஜ் குழு அநுபவம் மிக்க உலமாக்களாலும் வழிகாட்டிகளாலும் வழி நடத்தப்படும்.

மக்காவில் தங்குமிட வசதி

ஹோட்டல் தாருல் — கஹ்ஸாவில்

தகவல்களுக்கும், பதிவுகளுக்கும் தொடர்பு கொள்க.—

அல்ஹாஜ் எம ஐ எஸ் சுலைமான்

கச்சேரி வீதி, மாத்தளை.

# உலகச் செய்திகள்

## மனித உரிமை மீறல்கள்

மாஸ்கோ, மே 24

எஸ்தோனியாவில் உள்ள ரஷ்ய தொழிலாளர்கள் நாளை வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர்.

ரஷ்யத் தலைவர் மிக்காயல் கொர்பச்சேவின் வேண்டுகோளை அடுத்தே அவர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர்.

மூன்று நாள் வேலை நிறுத்தம் நீடித்தது. எஸ்தோனிய குடியரசில் போக்குவரத்து, சுரங்க வேலைகள் யாவும் ஸ்தம்பித்து நடைபெற்றன. பிரதான தொழிற்சாலைகள் யாவும் மூடப்பட்டன.

வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறு ரஷ்யத் தலைவர் மிக்காயல் கொர்பச்சேவ் விடுத்த வேண்டுகோளை ஏற்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். [எ]

அவர்களை அமைதியாக இருக்குமாறு உப ஜனாதிபதி சர்மா வேண்டினார். அவர் சூலக்கு செவிமடுக்க எதிர்க் கட்சியினர் மறுக்கவே சர்மா ஜனநாயகத்தை நசுக்க முயற்சிக்காதீர்கள் என சத்தமிட்டார். இவ்வேளையில் அவர் கண்களிலிருந்தும் நீர் வடிந்தது. [எ]

## கிம் — இல் — சுங் மீண்டும் தெரிவு

டோக்கியோ, மே 24

வட கொரிய ஜனாதிபதியாக கிம்-இல்-சுங் மீண்டும் தெரிவாகியிருக்கிறார்.

கொரிய மத்திய செய்தி ஸ்தாபனம் இதுபற்றி அறிவித்தது. [எ]

# மனித உரிமை மீறல்கள் பாகிஸ்தானில் குறைந்துள்ளன

## சர்வதேச மன்னிப்புச் சபை அறிவிப்பு

லண்டன், மே 24

பாகிஸ்தானில் மனித உரிமை மீறல்கள் இப்போது வெகுவாகக் குறைந்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

ஆயினும் தொடர்ந்த வண்ணமிருக்கும் சில மனித உரிமை மீறல் சம்பவங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்படுவது அவசியமெனவும் மேற்படி சபை தெரிவித்துள்ளது.

பாக் பிரதமராக பெனாஸிர் பூட்டோ பதவியேற்றதன் பின் பதிவு செய்யப்பட்ட விவரங்களின்படியே மேற்படி கருத்தை சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டது.

சித்திரவதைகள் பாகிஸ்தானில் உள்ள பொலீஸ் நிலையங்களில் தொடர்ந்தவண்ணமுள்ளன. சில சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு கசையடியும் வழங்கப்படுகிறது. இவ்வாறு லண்டன் ஆதரவு சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பெனாஸிர் பதவி ஏற்றபோது 2,029 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு பாகிஸ்தானில் எண்ணற்றோர் பொலீஸ் நிலையங்களில் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை கூறுகிறது. [எ]


அல்ஹாஜ் எம ஐ எஸ் சுலைமான்
கச்சேரி வீதி, மாத்தளை.
தொலைபேசி. 066-2070, 2016, 2095

அல்ஹாஜ் எம புஆர்தீன் ஹாஷிம
பேர்ஸியன் ஹோட்டல், மாத்தளை.
தொலைபேசி. 066-2307, 2689

அல்ஹாஜ் எச் எல் எம மவ்ரூப்
41, தம்பண்ணி வீதி, குருநாகலை.
தொலைபேசி; 037-23188

ஸுபையா புஷ்பா
25, மாக்கான் மாக்கார் ஆர்கேட்
காலிமுகம், கொழும்பு-3.
தொலைபேசி: 26925, 589781, 693605


நாம்புலுவை

# பிரசவ மனைக்கு மின்வசதி வழங்குக

## ஸ்ரீ.ல.மு.கா. உறுப்பினர் வேண்டுகோள்

கொழும்பு, மே 24

நாம்புலுவை பஸ்யாலையிலுள்ள பிரசவ மருத்துவ மனைக்கு மின்சார வசதி வழங்கப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம பி அல்ஹாஜ் என், எம புஹார்தீன் சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ரணவீரவிடம இப்படிக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் குறைபாட்டை சுட்டிக் காட்டி அவர் அமைச்சருக்கு கடிதம ஒன்றை எழுதியுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது-

இந்த பிரசவ விடுதி அமைந்துள்ள பிரதேசத்தில் மின்சார வசதி இருக்கின்றது.

ஆனால் இந்தப் பிரசவ விடுதிக்கு இதுவரை மின்சாரம வழங்கப்படவில்லை.

அதேவேளை, இங்கு நிரந்தர டாக்டர் ஒருவர் இல்லாததால் மகப்பேற்றுக்காக வரும பெண்கள் பெரும கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்தக் குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்கவும.

இப்படி அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-ற)

## கட்டணம் செலுத்தாதோர் இணைப்பு துண்டிப்பு

கொழும்பு மே 24

தொலைபேசி கட்டணங்களை செலுத்தாத பாவனையாளர்களின் தொலைபேசி இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.

கொழும்பிலும சுற்றியுள்ள பிரதேசத்திலும பல தொலைபேசிப் பாவனையாளர்கள் தொலைபேசி கட்டணங்களை உரிய காலத்திற்குள் செலுத்தாதிருக்கின்றனர். இதனால் திணைக்களத்திற்குச் சேர வேண்டிய பல லட்சம ரூபா வருமானம் அறவிடப்படாமல் இருக்கிறது. [ந—404]

கட்டுநாயக்காவில்

# போலி பாஸ்போர்ட் நபர்கள் 14 பேர் கைது

கொழும்பு, மே 24

போலி பாஸ்போர்ட்டுகளை பயன்படுத்தி வெளிநாடு செல்ல முற்பட்ட 14 பேர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர். இவர்களில் அநேகர் வட பகுதியைச் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஸ்ரீதரன், ரொஷான் அந்தோனி பிள்ளை, டபிள்யூ ஷண்முகதாசன், ஜீ அருள்நாயகம, ஏ ஜேசுதாசன், டீ அரசரத்தினம, கே நந்தகுமார், ஏ அருள், கே எம முத்தையா, எஸ் இராசலிங்கம,

நீர்கொழும்பைச் சேர்ந்த எமில்டா, பெர்னாண்டோ, பயாகலை பீ எல் மில்டன் குரே, வென்னப்புவை டபிள்யூ ஏ வென்ட்போல் பெர்னாண்டோ, மாரவிலை அசோகா ரணசிங்க ஆகியோரே போலி பாஸ்போர்ட்டுகளுடன் சிக்கியோர்.

இவர்கள் அனைவரும கட்டுநாயக்கா பொலீஸாரினால் நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் திரு என் மகேந்திரராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மாஜிஸ்திரேட் திரு மகேந்திரராஜா இவர்கள் ஒவ்வொருவருக்கும தலா 1,500 ரூபா வீதம 21 ஆயிரம ரூபாவை அபராதமாக விதித்தார். (ல-வ)


தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும்
அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய
நூல்கள் தொடர்பான
உங்கள் தேவைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்



எம். டி. குணசேன
அன்ட் கம். லிமிட்.
217 ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11
தொலைபேசி- 23981—84.

# புனித ஹஜ் யாத்திரையின் மகத்துவம் உணர்வோம்

— ஏ. எஸ். ஏ. எம். ஸியாஉத்தீன் உஸ்மானி —

கலிமா ஷஹாதத்தின் மூலம் தவ்ஹீத் – ஏகத்தவ உறுதி வலுப்படுகிறது–

தொழுகையின் மூலம அகத் தூய்மையும புறத்தூய்மையும சித்தியாகிறது–

ஸக்காத் மூலம் மனத் தாராளமும் இரக்க சித்தமும் வாய்க்கிறது–

நோன்பின் வாயிலாக மன இச்சைகள் முறிக்கப்பட்டு மனச் சாந்தி கிடைக்கிறது–

புனித ஹஜ்ஜில் இவை அனைத்தும் கிடைப்பதுடன் அல்லாஹுத்தஆலாவின் அருள் தொடர்பும் வெகுவாகக் கிடைக்கிறது!

எனவே, ஹஜ்ஜின் மூலம் புண்ணியம், பலாபலன்கள் அனைத்தும ஒன்று சேரக் கிடைக்கும வாய்ப்பு இருப்பதினால் இதை "ஜாமிஉல் இபாதத்" எனச் சொல்லப்படுகிறது!

ஹஜ்ஜை நிறைவேற்றியதன் காரணமாக இஸ்லாமியக் கடமைகள் அனைத்தையும் சம்பூரணமாக நிறைவேற்றிய நவீபு கிடைக்கிறது.

எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் மறையாம் திருமறையில் "இறைவனை வணங்குவதற்காக இந்த உலகத்தில் மனிதர்களுக்காக அமைக்கப்பெற்ற ஆலயங்களில் முதன்மையானது நிச்சயமாக பக்கா (எனும் மக்கா) வில் இருப்பதுதான்.

(அது ஆசிர்வதிக்கப்பட்ட) பாக்கியமுடையதாகவும் அகிலத்தாருக்கு நேரான வழிகாட்டியாகவும் இருக்கின்றது–

அதில் தெளிவான அத்தாட்சிகள் உள்ளன. (நபி) இபுறாஹிம் (அலை) நின்ற (மகாமு இப்றாஹிம்) தலமும் இருக்கின்றது.

யார் அதில் நுழைகின்றாரோ அவர் அபயம பெற்று அச்சம அற்றவராகி விடுகிறார்.

ஆகவே, எவர்கள் (அங்கு யாத்திரை செல்ல) சக்தி உடையவர்களாக இருக்கின்றார்களோ, அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக அங்கு ஹஜ்ஜு செய்வது கடமையாகும.

எவரேனும் இதை நிராகரித்தால் (அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து போவதில்லை) நிச்சயமாக அல்லாஹ் உலகத்தார்களை விட்டும் தேவையற்றவன்–" [3–96,97]

ஹஜ்ஜையும் உம்றாவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள் [2–196]

மேற் குறிப்பிடப்பட்ட இறை வசனங்களில "லில்லாஹி – அல்லாஹ்வுக்காக" என்று நிபந்தனை யிடப்பட்டிருப்பதை மறவாமல் மனதில் நாம் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் அல்லாஹ் "ஹஜ்ஜு (செய்வதற்குரிய காலம்) குறிப்பிட்ட மாதங்களில் தாம. ஆகவே எவர் அக்காலங்களில் ஹஜ்ஜை (இஹ்றாம கட்டுவதன் மூலம) கடமையாக்கிக் கொண்டாரோ அவர் (இஹ்றாம் நீங்கும வரை) சம்போகம, கெட்ட வார்த்தை பேசுதல், வீண் தர்க்கங்கள் முதலியன செய்யக் கூடாது" [2–197] என்று அறிவித்துள்ளான்.

இந்த வாக்கியத்தில் கெட்ட தன்மை, வீண் தர்க்கம், குதர்க்கம, சண்டையிடுதல் அனைத்தையும் விட்டு தவிர்க்க வேண்டியது கடமையாகும் என்பது எச்சரிக்கப் பட்டுள்ளது!

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளம் பற்றி உள்ளார்கள்–

"மக்களே! ஹஜ்ஜு செய்யுங்கள். அழுக்கை தண்ணீர் எப்படி நீக்கிப் பரிசுத்தப்படுத்துகிறதோ, அதே போன்ற மனிதனை ஹஜ்ஜு பாவங்களை விட்டும நீக்கி பரிசுத்தப்படுத்துகிறது–

[தப்றானீ]

எவர் ஹஜ்ஜு செய்து ஹஜ்ஜுக்குப் பாதகமான காரியங்களைச் செய்யாமலும் பொல்லாங்கான வார்த்தைகளைப் பேசாமலும் இருக்கிறாரோ அவர் அன்று பிறந்த பாலகரைப் போல் (பாப தோஷமில்லாத் தன்மையில்) ஆகி விடுகிறார்.

(ஹஜ்ஜு கபூலாக்கப்பட்ட) ஒரு ஸாலிஹான ஹாஜி தனது சந்ததிகளில் 400 பேர்களுக்கு ஷபாஅத்துச் செய்யக் கூடியவராக இருக்கிறார்!

மப்ரூரான ஹஜ்ஜுக்கு சுவர்க்கம் நிச்சயமாகக் கிடைக்கும–

மப்ரூரான ஹஜ்ஜு என்றால் என்ன என்பது பற்றி வினவுப்பட்ட போது கூறினார்கள்– "மப்ரூரான ஹஜ் என்பது உணவளிப்பதும் மலர்ந்த முகத்துடன் இனிதாய்ப் பேசுவதுமாகும்–" [தப்றானீ]

ஹஜ்ஜாஜ்களும் உம்றாச் செய்பவர்களும் அல்லாஹ்வுடைய தூதுக்குழுவினர், அவர்களது கோரிக்கைகளை அல்லாஹ் நிறைவேற்றிக் கொடுக்கிறான்.

அவர்கள் செலவு செய்யும் பணம் காசுகளுக்கு பகரம் ஆயிரமாயிரம மடங்கு அதிகமாக அளிக்கிறான் [பைஹகீ]

மகத்துவம மிக்க உம்றாவும ஹஜ்ஜும அல்லாஹ்வுக்காக என்ற இஃலாஸ் (சித்தசுத்தி) தன்மையுடன் இருக்க வேண்டுமே தவிர உலக சம்பந்தமான பிரபல்யம், பட்டம், புகழ் முதலிய லோகாதயப் பலனைக் கருதியதாக இருக்கக் கூடாது–

ஏனைய உல்லாசப் பயணம், கேளிக்கைச் சுற்றுலா போன்றவைகளாகவும் இதைக் கருதிக் கொள்ளலாகாது–

இறுதித் தீர்ப்புநாள் நெருங்கி உள்ள காலத்தில் எனது (உம்மத்தி) சமூகத்தாரில் சிலர் அரசர்களைப் போலவும் பிரபுக்களைப் போலவும் ஹஜ்ஜிற்கான புனித பயணத்தை உல்லாசப் பிரயாணத்தைப் போல மேற்கொள்வர்.

நடுத்தர நிலையிலுள்ள சிலர் வெறுமனே பொருளீட்டும் ஆதாய நோக்கத்தோடும் (உலமா) அறிஞர்கள் சிலர் தங்களைப் பிரபல்யப்படுத்தும் முகஸ்துதிப் பிரீதி நோக்கத்தோடும், எளிய தன்மையிலுள்ள சிலர் யாசகம் வாங்கக் கூடிய கருத்தோடும் ஹஜ்ஜுடைய புனிதப் பயணத்தை மேற்கொள்ள முற்பட்டு விடுவார்கள்–

எனவே, நாமும் சிறப்பு மிக்க ஹஜ்ஜின் மகத்துவத்தை அறிந்து ஹஜ் வணக்கத்தை மிகப் பேணுதலாக நிறைவேற்றி அல்லாஹ்வின் நல்லருளைப் பெற்றுக் கொள்வோமாக!

எல்லாம வல்ல அல்லாஹ் அப்புனித பாக்கியத்தை நம் அனைவருக்கும் தந்தருள்வானாக! ஆமீன்!!

## நபிகளாரின் எச்சரிக்கை

ஒரு முறை நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் முஹாஜிரின்களைப் பார்த்து பின்வருமாறு எச்சரிக்கை விடுத்தார்கள்:

ஐந்து விடயங்களைப் பற்றி உங்களை எச்சரிக்கிறேன்.

அவற்றால் நீங்கள் சோதிக்கப்பட்டு அவை உங்கள் மத்தியில் ஏற்பட்டுவிடக் கூடாது என்று அல்லாஹ்விடம பாதுகாப்புத் தேடுகிறேன்.

எந்த ஒரு சமூகத்தவரேனும அல்லாஹ்வினதும அவனது ரஸூலினதும கட்டுப்பாடுகளை மீறி நடந்தால் அவர்கள் மீது அந்நிய சமூகங்களைச் சேர்ந்த எதிரிகள் தூண்டிவிடப்படுவார்கள்.

அந்த எதிரிகள் இவர்களின் சொத்துக்களில் பலதை அபகரித்துக் கொள்வார்கள்.

எந்த ஒரு சமூகத்தவரேனும அளவு நிறுவைகளில் மோசம செய்தால் அவர்கள் பஞ்சம, அரசாங்கத்தின் கொடுமை, வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிக்க முடியாமை என்பவற்றிற்கு ஆளாக்கப்படுவார்கள்.

எந்தச் சமூகத்தவரேனும தமது சொத்துக்களுக்குரிய

## முகம்மது நபி அவர்களின் போதனைகள்

தொழுகையாகின்றது சுவனபதியின் திறவுகோலாகும.

தொழுகை முஃமின்களின் மிஃறாஜாகும.

அயலான் பசியோடிருக்க தான் மட்டும வயிறு நிறைய உண்பவன் உண்மை விசுவாசி யல்ல.

தனது நண்பருக்கு மறைமுகமாக உதவி செய்யும ஒருவனுக்கு அல்லாஹ் இம்மையிலும மறுமையிலும உதவி புரிவான்.

அல்லாஹ்விடத்திலே மிகவும சங்கை வாய்ந்தவர் அவனை அதிகம அஞ்சுபவராவார்.

தனது கையினால் உழைத்து உண்ணும உணவைவிட மிகச் சிறந்த உணவை எவரும உண்ண முடியாது.

கோபம ஷைத்தானின் குணம ஷைத்தான் நெருப்பினால் படைக்கப்பட்டுள்ளான், நெருப்பை தண்ணீர் மூலமே அணைக்க முடியும.

எனவே உங்களில் ஒருவருக்கு கோபம ஏற்பட்டால் அவர் வுழூ செய்து கொள்ளவும.

மனிதரைப் பற்றி தீய எண்ணம கொள்ளாதீர்கள்.

இது நபி (ஸல்) அவர்களின் நற்போதனைகளாகும.

— ஏ எம பைஸல் —

## ★ஸலாம் கூறிய ஜனாதிபதி!

## திருக்குர்ஆன் வாசகத்தையும் ஓதிக் காட்டினார்

கொழும்பில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் தென் கிழக்காசிய இஸ்லாமிய சர்வதேச "தஃவா" கருத்தரங்கை அங்குரார்ப்பணம் செய்த ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச தனது பேச்சின் ஆரம்பத்தில் "அஸ்ஸலாமு அலைக்கும்" என்று ஸலாம் கூறினார்.

அதனோடு மட்டும் நின்று விடாமல் திருக்குர்ஆன், ஹதீஸ் போன்றவற்றையும் தமது பேச்சில் தொட்டுப் பேசினார்–

தமது பேச்சின் ஒரு கட்டத்தில் அல்குர்ஆனின் 16 ஆவது அத்தியாயத்தில் 125 ஆம் திருவசனத்தை ஜனாதிபதி அரபியில் ஓதிக் காட்டி கருத்தரங்கு மண்டபத்தில் திரண்டிருந்தோரின் பாராட்டைப் பெற்றார்–

"(நபியே!) நீர் (மனிதர்களை) நளினமாகவும் அழகான நல் உபதேசத்தைக் கொண்டுமே உம் இறைவனின் வழியின் பால் அழைப்பீராக!

அன்றி அவர்களுடன் (தர்க்கிக்க நேரிட்டால்) நீர் (கண்ணியமான) அழகான முறையில் தர்க்கம் செய்வீராக!

அவனுடைய வழியிலிருந்து தவறியவர்கள் எவர்கள் என்பதை நிச்சயமாக உம் இறைவன் நன்கு அறிவான். நேரான வழியில் இருப்போர் யார் என்பதையும் அவன் தான் நன்கு அறிவான்.

பொருத்தமான ஒரு குறாவை

## ஹஜ் பற்றிய குர்ஆன் வசனங்கள்

* "(இவ்வுலகில், இறைவனை வணங்குவதற்கென) மனிதர்களுக்கு அமைக்கப் பெற்ற ஆலயங்களில் முதன்மையானது நிச்சயமாக "பக்கா"வில் (– மக்காவில்) இருப்பதுதான்.

(அது ஆசிர்வதிக்கப்பட்ட

ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் படைப்புக்களின் தேவையுமற்றவனாக இருக்கின்றான்"

(சூறா 3: ஆயத்து 97)

"ஹஜ்ஜுக்கு வருமாறு நீர் மனிதர்களுக்கு அறிக்கையிடும; (அவர்கள்) கால்நடையாகவும

## தினபதி இஸ்லாமிய

தயாரிப்பு: எப். எம். பைரூஸ்

## இஸ்லாமிய முறையில் உணவு உட்கொள்வோம்

# இஸ்லாமிய முறையில்

# உணவு உட்கொள்வோம்

— ஏ. ஆர். எம். ஜ[illegible] —

உண்பதற்கு முன்பு இரு கைகளையும் வாயையும் கழுவிக் கொள்ள வேண்டும். நிலத்தில் விரிப்பை விரித்து உணவுப் பாத்திரங்களைக் கீழே வைத்து இருந்து உண்ணுவது சுன்னத்தான முறையாகும்.

மேசை மேல் வைத்து உண்பது தடை செய்யப்படவில்லை. உணவை உண்பதற்காக உட்காருவதற்கு மூன்று முறைகள் இருக்கின்றன.

முந்திய அத்தஹியாத் இருப்பது போல் காலையும் மடித்து இரு பாதங்களிலும் இருத்தல்,

வலது காலை மடித்து நாட்டிக் கொண்டு இடது காலின் மேலிருத்தல்,

குந்தியிருத்தல்,

சாய்ந்து கொண்டும் படுத்துக் கொண்டும் உணவை உண்பது மக்ரூஹ்.

உண்பதால் இன்ப சுகத்தை நாடாது, வணக்கம் புரியும் சக்தி பெற வேண்டுமென நாடிக் கொள்வது சிறப்பாகும்.

பசி வந்த பின்பு உண்பதே நல்லது, வயிறு நிறைய முன் நிறுத்திக் கொள்வதே மேலானது.

வகை வகையான உணவுகளைத் தேடிக் கொண்டிராமல், உள்ளதைக் கொண்டே போதுமாக்கிக் கொள்ள வேண்டும். இது நபிமார்கள், மேதைகளின் நற்பண்பாகும்.

தனிமையாக உண்ணாது பல சேர்ந்து உண்பது நற்பழக்கமாகும். இதனால் உணவில் பொலிவு ஏற்படுகிறது.

கூடி உண்ணும் போது மௌனமாக இராமல் நல்ல விஷயங்களைப் பேசிக் கொள்ளலாம். உண்ணுவதற்கு முன்னும் பின்னும் உப்பு சாப்பிடுவது, சிறு சிறு கவளங்களாக வாயில் விட்டு மென்று தின்பது, அதன் பின்பே அடுத்த கவளத்தை எடுப்பது, ரொட்டிக்கு மேல் கறியில்லாதவைகளை வைக்காமலிருப்பது, கழுவுப் பொருட்களை உணவும் பாத்திரத்திலிடாமல் வேறிடத்தில் வைப்பது, உண்ணும் போது தேவையின்றி நீரருந்தாதிருப்பது ஆகியன சிறந்த நற்பண்புகளாகும்.

உண்ண ஆரம்பிக்கும் போது பிஸ்மில் சொல்வது சுன்னத்தாகும். ஆரம்பத்தில் பிஸ்மில் சொல்லத் தவறினால் "பிஸ்மில்லாஹி அவ்வலஹு வஆகிரஹு" என்று இடையில் கூறுவது சுன்னத்தாகும்.

பக்கத்தில் வேறுயாரும் இருப்பின் பிஸ்மில்லாஹ்வை உரத்துச் சொல்வது சிறப்பாகும்.

வலது கையால் சாப்பிடுவதும், பாண், ரொட்டி போன்றவற்றைப் பெருவிரல் அடுத்த இரு பெருவிரல்கள் ஆகிய மூன்று விரல்களால் மாத்திரம் சாப்பிடுவதும் உணவு பற்றி எத்தகைய குறையும் கூறாமலிருப்பதும், சமைத்த உணவு இறைச்சி போன்றவற்றைக் கத்தியால் வெட்டாமலிருப்பதும், கீழே சிந்திய உணவு துணிக்கைகளை எடுத்து அழுக்கை அகற்றி சாப்பிட்டுக் கொள்வதும், சூடான உணவு பானங்களில் ஊதாமலிருப்பதும் சுன்னத்தாகும்.

நாம் அருந்தும் போது பானமிருக்கும் பாத்திரத்தை வலது கையால் பிடித்து பிஸ்மில் சொல்லி உறிஞ்சிக் குடிக்க வேண்டும்.

நின்ற நிலையில், உறங்கிய நிலையிலும் குடிப்பதும் மக்ரூஹ் ஆகும்—

பாத்திரத்தில் மூச்சு விடுவதும், ஊதுவதும் ஏப்பமிடுவதும் மக்ரூஹ் ஆகும். பருகுமுன் பாத்திரத்தின் உட்புறத்தைப் பார்த்துக் கொள்வது சிறந்ததாகும்.

உணவை உண்டபின் விரல்களிலும், பாத்திரங்களிலும் ஒட்டியுள்ள உணவை எடுத்து உட்கொள்வது சிறப்பாகும்.

சாப்பாட்டு முடிந்ததும் குறைந்தது "அல்ஹம்து லில்லாஹ்" என்றாவது கூறிக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வுத்த ஆலாவைப் புகழ்வதும் துஆ இரப்பதும் சுன்னத்தாகும்.

பானங்கள் அருந்திய பின்பும் இந்த துஆவை ஓதிக் கொள்ள வேண்டும்.

உண்டபின் கைகளை கழுவித் துடைத்துக் கொள்ள வேண்டும். இவை நாம் அறிய வேண்டிய சில ஒழுங்கு முறைகளாகும்.

---

செய்தால் அவர்கள் பஞ்சம், அரசாங்கத்தின் கொடுமை, வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிக்க முடியாமை என்பவற்றிற்கு ஆளாக்கப்படுவார்கள்.

எந்தச் சமூகத்தவரேனும் தமது சொத்துக்களுக்குரிய ஸகாத்தைக் கொடுக்கா விட்டால் அவர்களுக்கு மழை இரட்சிக்கப்பட மாட்டாது.

ஆடு, மாடு போன்ற மிருகங்கள் இல்லாவிட்டால் அவர்கள் வாழும் இடங்களில் மழையே பெய்யாது.

எந்த ஒரு சமூகத்திலேனும் ஸினா (விபசாரம்) சாதாரணமாக நடக்கும் ஒன்றாக ஆகிவிட்டால் அவர்களின் மூதாதையர்களில் காணப்படாத நோய்கள் அவர்களிடம் பரவும்.

எந்த சமூகத்தையும் சேர்ந்த தலைவர்களேனும் அல்லாஹ்வின் கிதாபின் (அல்குர்ஆனின்) அடிப்படையில் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறினால் அந்த சமூகத் தலைவர்களுக்கு இடையில் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு சீரழிவார்கள்.

நல்ஸா எம் ஹனீபா

---

* "(இவ்வுலகில், இறைவனை வணங்குவதற்கென) மனிதர்களுக்கு அமைக்கப் பெற்ற ஆலயங்களில் முதன்மையானது நிச்சயமாக "பக்கா"வில் (– மக்காவில்) இருப்பதுதான்.

(அது ஆசீர்வதிக்கப்பட்டதாகவும்) மிக்க பாக்கியமுள்ளதாகவும், அகிலத்தாருக்கு நேரான வழி(காட்டி)யாகவும் இருக்கின்றது"

(சூறா 3: ஆயத்து 96)

* "அதில் தெளிவான அத்தாட்சிகளும் இருக்கின்றன.

இப்ராஹீம் (தொழுகைக்காக) நின்ற இடமும் இருக்கின்றது. எவன் அதில் நுழைகின்றானோ அவன், (அபயம் பெற்று) அச்சமற்றவனாகி விடுகின்றான்.

ஆகவே, எவர்கள் அங்கு யாத்திரை செல்லச் சக்தியுடையவர்களாக இருக்கின்றார்களோ, அத்தகைய மனிதர்கள் மீது, அல்லாஹ்வுக்காக (அங்கு சென்று) அவ்வாலயத்தை ஹஜ்ஜு செய்வது கடமையாகும்.

எவரேனும் இதை நிராகரித்தால் (அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து விடுவதில்லை. ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் படைப்புக்களின் தேவையுமற்றவனாக இருக்கின்றான்"

(சூறா 3: ஆயத்து 97)

"ஹஜ்ஜுக்கு வருமாறு நீர் மனிதர்களுக்கு அறிக்கையிடும்; (அவர்கள்) கால்நடையாகவும் உம்மிடம் வருவார்கள்.

இளைத்த ஒட்டகங்களின் மீது வெகு தொலை தூரத்திலிருந்தும் (உம்மிடம்) வருவார்கள்"

(சூறா 22: ஆயத்து 27)

* "பின்னர் (தலை முடி இறக்கி, நகம் தரித்து, குளித்துத்) தங்கள் அழுக்குகளைச் சுத்தம் செய்து கொண்டு, தங்களுடைய நேர்ச்சைகளையும் நிறைவேற்றி, புராதன ஆலயத்தையும் (இடம் சுற்றி) "தவ்வாபு" செய்யவும்"

(சூறா 22: ஆய 29)

அல்ஹாபிழ் ஏ சி எம் செய்னு லாப்தீன்

---

அவனுடைய வழியிலிருந்து தவறியவர்கள் எவர்கள் என்பதை நிச்சயமாக உம் இறைவன் நன்கு அறிவான். நேரான வழியில் இருப்போர் யார் என்பதையும் அவன் தான் நன்கு அறிவான்.

பொருத்தமான ஒரு சூறாவை அரபியில் ஓதிக்காட்டி அதன் கருத்தையும் கூறிய ஜனாதிபதி, "தஃவா விஷயத்தில் எவரையும் கட்டாயப்படுத்தவோ வற்புறுத்தவோ கூடாது-

"தஃவா" பணி அமைதியாகவும் இன்னல் விளைவிக்காமலும் புரிந்து கொள்ளக் கூடிய முறையிலும் செய்யப்பட வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதியின் அர்த்தபுஷ்டி மிக்க உரை கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்திருந்த வெளிநாட்டு பேராளர்களைப் பெரிதும் கவர்ந்தது!

— எப் எம் எப்

---

# அன்பு அவசியம்

* அன்பானது கருமங்களைப் பார்க்கிலும், வணக்கத்தைப் பார்க்கிலும், அறிவைப் பார்க்கிலும் பெரிது.

* பொறாமை கொள்ளாமல் இருப்பவனே உண்மையில் மனித வர்க்கத்தினிடம் அன்பு செலுத்துபவன்.

* அன்பு செய்தால் அல்லல் தீரும்; அல்லல் தீர்ந்தால் அமைதி பெருகும். அமைதி பெருகினால் அதுவே சுகம்.

* அன்பைக் கொடு; உதவியைக் கொடு: ஊழியத்தை கொடு; இறைவனும் அன்பு கொள்வான்.

* அன்பு உள்ளவன்; மக்களுக்கும்; இறைவனுக்கும்; சுவர்க்கத்திற்கும் பக்கத்தில் இருக்கிறான்.

* உதட்டில் வரும் அன்பு உள்ளத்திலும் வர வேண்டும், அதுவே பூரண அன்பு.

* இறைவனிடம் அன்பு செலுத்துகிறவன் இதயமே அவனின் இருப்பிடம்.

* கடலின் ஆழத்தையும் அளந்து விடலாம்; ஆனால் அன்பின் ஆழத்தை அளவிட முடியாது.

இது நபிகளாரின் பொன் மொழிகளாகும்.

எம் என் அபூஹுரைரா

---

# மஜ்லிஸ்

ஹிஜ்ரி 1410: ஷவ்வால் பிறை 29

## உலமாக்கள் குழு நியமனம்

முஸ்லிம்களின் அரசியல், சமூக விவகாரப் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண்பதற்காக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாச் சபை ஒரு குழுவை நியமித்துள்ளது.

முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாக உரிய அரச அதிகாரிகளுடனும் அரசியல் அமைப்புகளுடனும் அமைச்சர்கள், எம் பிமார்கள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு செயற்படும் நோக்குடனேயே இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது

இது வரவேற்கத்தக்க ஒரு சிறந்த ஏற்பாடாகும்.

உலமாக்கள் சமுதாயத்தின் பாதுகாப்பு அரண்களைப் போன்றவர்கள்.

உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகளாவர் என்று ஹதீதில் கூறப்பட்டுள்ளது. — எனவே...

பிரச்சினைக்குத் தீர்வுகளை நாடும் போது உலமாக்களையும் இணைத்துக் கொண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் பெறுபேறுகள் நல்லவையாகவும் நன்மை அளிப்பனவாகவும் இருக்கும் என்பது திண்ணம்.

# கல்வித் துறையில் சீர்கேடுகள்

# தவறான வழிநடத்தல் காரணம்

## பந்துல குணவர்தன சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 24

கல்வி அமைச்சிலும், கல்வித் திணைக்களத்திலும் வேரூன்றி உள்ள உயர் அதிகாரிகளின் அதிகாரத்துவம் ஒழிக்கப்பட வேண்டும். உயர் அதிகாரிகளின் தவறான வழி நடத்தலே இப்பொழுது கல்வித் துறையில் சீர்கேடுகளை ஏற்படுத்தி உள்ளன.

இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் திரு பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்-

கல்வி, உயர்கல்வி அமைச்சுக்கான குறைநிரப்பு பிரேரணை மீது பேசிய பந்துல குணவர்தன மேலும் கூறியதாவது—

மாறி மாறி வரும் கல்வி அமைச்சர்கள் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்துகின்றனர். ஆனால் அவற்றை செயல்படுத்தும் அதிகாரிகள் அவற்றை முறையாக செயல்படுத்துவதில்லை.

அங்கு பணிபுரியும் உயர் அதிகாரிகள் அமைச்சர்களை தவறான வழியில் இட்டுச் செல்கின்றனர்.

இதனாலேயே ஆசிரியர்கள் மத்தியிலும், மாணவர்கள் மத்தியிலும் ஏற்படும் பிரச்சினைகள் பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்திவிடுகின்றன. எனவே கல்வி அமைச்சிலும், கல்வி திணைக்களங்களிலும் காணப்படும் உயர் அதிகாரிகளின் அதிகாரத்துவத்தை ஒழிக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இப்படி திரு பந்துல குணவர்தன கூறினார்.

(ல-ய)

## மீன் உற்பத்தி 5 ஆண்டு திட்டம்

கொழும்பு, மே 24

மீன் உற்பத்தியை அதிகரிக்க ஐந்தாண்டு காலத் திட்டம் ஒன்றை மீன் பிடித் துறை அமைச்சு தயாரித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு அபிவிருத்தி உதவிகள் வழங்கப்படும்.

மீன்பிடிக் கூட்டுறவு சங்கங்களில், மீனவர்கள் ஒருமுகப் படுத்தப்படுகின்றனர்.

தமது உறுப்பினர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக, பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த இயலும் வகையில் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் பலப் படுத்தப்படவுள்ளன. (ஐ-ழ)

## இவ்வருட இறுதிக்குள் கலைஞர்களையும் கௌரவிக்க எண்ணம்

### ராஜாங்க அமைச்சர் தேவராஜ்

கொழும்பு, மே 24

கடந்த எட்டு ஆண்டுகளாக புறக்கணிக்கப்பட்டிருந்த தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள், விமர்சகர்கள் அனைவரையும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள சாகித்திய விழாவில் கௌரவிக்க உள்ளது போன்று இவ்வருட இறுதிக்குள். கலைஞர்களையும் கௌரவிக்க எண்ணியுள்ளோம்.

கொள்ளுப்பிட்டி, ரன்முத்து ஹோட்டலில் நடைபெற்ற அபுநானாவின் "சொத்துக்குப் பாட்டு" ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய இந்தசமய, இந்து கலாசார, தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் பி பி தேவராஜ் இப்படி தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

நகைச்சுவையை வெளிப்படுத்தி ரசிகர்களை சிரித்து மகிழ வைப்பதற்கு தனித்திறமை வேண்டும். ஏனெனில் அவர்களது நோக்கமே தமது திறமையில் பிறரை மகிழ்விப்பதாகும். அவர்கள் பிறரை சிரிக்கவைப்பதோடு, சிந்திக்கவும் வைக்கிறார்கள்.

அந்த வகையில் எமது கலைஞரான அபுநானா என்ற பெயர் மிகவும் பிரபலமானது.

எமது அமைச்சு மிகவும் சிறியது. அத்தோடு எமது தமிழ் மொழி, கலை வளர்ச்சிக்காக குறைந்தளவு நிதியே ஒதுக்கப்படுகின்றது. என்றபோதும் எமது மனதை தளரவிடாது ஒரு பெரு நம்பிக்கையோடு சாகித்திய விழாவை நடத்த முன்வந்திருக்கின்றோம். இவ்வாறே கலைஞர்களை கௌரவிக்கவும் நாம் நிதி வசதியை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் பல்வேறு வகையிலே கலைஞர்களை ஊக்குவிக்கும் ஆவல் எமக்குண்டு.

இலங்கையில் பல இனங்களோடு இஸ்லாமியர்கள் இணைந்து வாழ்கிறார்கள். இஸ்லாம் எங்கள் வழி, இன்பத் தமிழ், எங்கள் மொழி என்ற உயரிய கொள்கையோடு வாழ்கிறார்கள். தமிழின் பால் அவர்களுக்கு உள்ள ஈடுபாடு மறுக்க முடியாதது.

ஆதலினால் நீங்கள் அனைவரும் தமிழ்க் கலைஞர்கள், தமிழ்க் கலைக்கு பணிபுரிபவர்கள் ஆதலால், எமது அமைச்சு, எம்மாலான உதவியை உங்களுக்கு ஆற்றும்

இப்படி அமைச்சர் தெரிவித்தார்.

இவ்விழாவில் சபாநாயகர் அல்ஹாஜ் எம எச் முகம்மது கலந்து கொண்டார். (ல-ங)



## சர்வதேச இஸ்லாமிய கருத்தரங்கு

கொழும்பில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சர்வதேச இஸ்லாமிய "தஃவா" கருத்தரங்கின் முதல் நாள் (21-5-90) மாலை அமர்வில் கலந்து கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பேராளர்கள்.

பேருவளை ஜாமிஆ நழீமிய்யா கலா பீடப் பணிப்பாளர் அல்ஹாஜ் கலாநிதி எம ஏ எம ஷுக்ரி இடதுபுறத்தில் காணப்படுகிறார்.

வெளிநாட்டுப் பிரமுகர்கள் மூவரையும் படத்திற் காணலாம். (ல-007)

## உலமா சபையின் மத்தியகுழுகூட்டம் 27 ஆம் திகதி

அகில இலங்கை ஜமஇய்யதுல் உலமாவின் விசேட மத்திய சபைக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம திகதி காலை 9-30 மணிக்கு கொள்ளுப்பிட்டி ஜும்ஆப் பள்ளியில் நடைபெறும்.

பல முக்கிய விடயங்கள் குறித்து முடிவுகள் எடுக்கப்படவிருப்பதால் சகல மத்தியசபை உறுப்பினர்களும் அரபிக் கல்லூரிகளின் அதிபர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அழைக்கப்பட்டுள்ளனர்.

உலமாச் சபையின் பொதுச் செயலாளர் மௌலவி எம ஜே எம றியாழ் இவ்வாறு தெரிவித்து உள்ளார். (ந-097)

## நீரில் மூழ்கி மரணம்

கொழும்பு, மே 24

நொச்சியாகம ஹல்மில்ல குளத்தில் குளிக்கச் சென்ற முஸ்லிம ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்-

இந்தச் சமபவம நேற்று முன்தினம காலை இடமபெற்றுள்ளது- பீ பஷீர் என்பவரே இறந்தவர் என அடையாளம காணப்பட்டுள்ளது-

[ல—ற]

## கிராமோதய சபை தலைவர் சுட்டுக்கொலை

கொழும்பு, மே 24

கல்முனை 7ஆம வட்டார கிராமோதய சபைத் தலைவர் ஜனாப் ஆதமலெவ்வை கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப் பட்டார்-

இவர் வியாபார வர்த்தக அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூரின் உறவினர் எனத் தெரிய வருகிறது- 5 பிள்ளைகளின் தந்தையான இவருக்கு வயது 42-

[ல—ற]

## ஜீ. சி. ஈ. உ/த பரீட்சை திட்டமிட்டபடி ஆகஸ்டில் — லலித்

கொழும்பு, மே 24

ஜீ சி ஈ உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறும்- எந்தக் காரணம் கொண்டும் பின்போடப்பட மாட்டாது மாணவர்கள் பரீட்சைக்கு தயாராக வேண்டும்-

கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி நேற்று முன்தினம நாடாளுமன்றத்தில் இப்படித் தெரிவித்தார்-

ஜீ சி ஈ உயர்தரப் பரீட்சை ஒத்தி வைக்கப்படுமா? என ஐ சோ மு உறுப்பினர் திரு அத்தாவுத செனவிரட்ன சபை ஒத்திவைப்பு வேளையில் கேள்வி ஒன்றை எழுப்பி இருந்தார்-

அதற்கு பதிலளிக்கையிலேயே — இப்படி அமைச்சர் தெரிவித்தார்- (ல-கு)

## 'விவசாயிக்கு

## வானொலி

25—5—1990

காலை

5-00 நாதாஞ்சலி
5-05 திருமுறைப் பாடல்கள் - எஸ் நாகராஜா
5-30 பாமாலை - கருமாரியம்மன் திருவிருத்தம
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை
8-30 குத்பா பிரசங்கம தொகுப்பு
8-50 கிராஅத்
8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 செந்தமிழ் வளர்த்த செமமல்கள் - வித்துவான் அ சரணவணமுத்து - க சி குலரத்தினம
9-45 கதாப்பிரசங்கம - எம வர்ணகுலசிங்கம
10-30 நினைவில் நிறைந்தவை
11-00 ஒலிபரப்பு முடிவு-



## சேவைகள்

### மே 25 (வெள்ளிக்கிழமை)

#### வந்து சேரும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0535 | தஹ்ரேன் | யூ எல் | 262 |
| 0540 | பஹ்ரேன் | ஜீ எப் | 142 |
| 0635 | குவைத் | கே யூ | 361 |
| 0650 | லண்டன் டுபாய் | யூ எல் | 504 |
| 0745 | ஜித்தா, றியாத் | எஸ் வி | 340 |
| 1225 | பாங்கொக் | ரி ஜி | 307 |
| 2005 | சிங்கப்பூர் | யூயூ எல் | 303 |
| 2140 | மாலைதீவு | யூ எல் | 102 |
| 2230 | சிங்கப்பூர் | எஸ் கியூ | 402 |
| 0655 | சிப்பல், பாரிஸ் அபுதாபி | யூ எல் | 564 |
| 0720 | பிரராங்க்போர்ட், சூரிச், டுபாய் | யூ எல் | 548 |
| 0710 | சப்பல், தஹ்ரேன் கராச்சி | கே எல் | 801 |
| 0845 | டுபாய், மாலைதிவு | ஈ கே | 802 |
| 1055 | திருச்சி | யூ எல் | 132 |
| 1140 | சென்னை, பமபாய் | ஐ சி | 573 |
| 1345 | மாலைதிவு, டுபாய், | ஈ கே | 803 |
| 1355 | மாலைதீவு | யூ எல் | 102 |
| 1550 | திருவனந்தபுரம | யூ எல் | 162 |
| 1755 | பமபாய் சென்னை | ஐ சி | 586 |
| 2230 | சிங்கப்பூர் | எஸ் கியூ | 402 |
| 2250 | சிட்னி மெல்பேர்ன் | யூ எல் | 679 |
| 2315 | சென்னை | யூ எல் | 122 |
| 2330 | சிங்கப்பூர் | யூ எல் | 303 |
| 2355 | ஹொங்கொங, பாங்கொக் | யூ எல் | 423 |

#### புறப்படும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0015 | டுபாய் சோபியா. | எல் இசட் | 582 |
| 0120 | ரோம | யூ எல் | 581 |
| 0200 | அபதாபி சிப்பல் பாரிஸ் | யூ எல் | 563 |
| 0230 | டுபாய் சூரிச் பிராங்க்போர்ட் | யூ எல் | 547 |
| 0700 | பஹ்ரேன் | ஜீ எப் | 142 |
| 0750 | குவைத் | கே யூ | 361 |
| 0915 | ஜித்தா றியாத் | எஸ் வி | 340 |
| 0930 | சிங்கப்பூர் | யூ எல் | 302 |
| 1325 | பாங்கொக் | ரி ஜி | 307 |
| 1815 | மாலைதீவு | யூ எல் | 101 |
| 2345 | சிங்கப்பூர் | எஸ் கியூ | 402 |
| 2235 | சென்னை | யூ எல் | 121 |
| 2245 | சிட்னி, மெல்பேர்ன் | யூ எல் | 678 |
| 0630 | மஸ்கட், அபுதாபி | ஜீ எப் | 3144 |
| 0805 | திருச்சி | யூ எல் | 131 |
| 0845 | பாங்கொக், ஹொங்கொங | யூ எல் | 422 |
| 0930 | சிங்கப்பூர் | யூ எல் | 302 |
| 0950 | டுபாய், மாலைதிவு | ஈ கே | 802 |
| 1000 | மாலைதிவு | யூ எல் | 101 |
| 1235 | சென்னை, பமபாய் | ஐ சி | 573 |
| 1300 | திருவனந்தபுரம | யூ எல் | 161 |
| 1450 | மாலைதீவு ,டுபாய் | ஈ கே | 803 |
| 1730 | பஹ்ரேன் | யூ எல் | 201 |
| 1840 | பமபாய், சென்னை | ஐ சி | 586 |
| 1905 | கராச்சி, தஹ்ரேன் சிப்பல் | கே எல் | 802 |
| 1945 | சென்னை | யூ எல் | 121 |
| 2345 | சிங்கப்பூர் | எஸ் கியூ | 402 |

### மே 26 (சனிக்கிழமை) ...

#### வந்து சேரும நேரம

| | | | |
|---|---|---|---|
| 0205 | சென்னை | யூ எல் | 124 |
| 0500 | ரோம | யூ எல் | 582 |
| 0515 | மஸ்கட், அபுதாபி | ஜீ எப் | 3144 |

குறிப்பு;— யூ எல் — எயர் லங்கா, ஐ சி — இந்தியன் எயர் லைன்ஸ், ஈ கே — எமிரேட்ஸ், எஸ் யூ — ஏரோபுளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிங்கப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யு — குவைத் எயர்வேய்ஸ், எஸ் வீ — சவூதியா, எஸ் டி — ஸ்டேர்லிங் எயர் லைன்ஸ், டி ஜி — தாய் எயர் வேய்ஸ், பி பி — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, — டி கே பிரத்தியேக சேவை, — கே எல் — றோயல் எயர் லைன்ஸ்,

விமான சேவைகள் மாற்றம பற்றி அறியத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம 452218, [விமான நிலையம்]

[ல—ற]

## விவசாயிக்கு பாராட்டு

கொழும்பு, மே 24

புதிய ரக வட்டக்காயை உற்பத்தி செய்த இளம விவசாயி ஒருவர் பாராட்டும அன்பளிப்பும பெற்றார்-

புத்தளம பகுதியைச் சேர்ந்த எம டி வில்சன் என்ற இளம விவசாயியே புதிய ரக வட்டக்காயை உற்பத்தி செய்தவர்-

விவசாய அபிவிருத்தி ஆராய்சித்துறை அமைச்சில் இந்த விவசாயிக்கு பாராட்டு வைபவம் ஒன்று நடத்தப்பட்டது-

இவ்வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய விவசாய ஆராய்ச்சித்துறை அமைச்சர் கூறியதாவது—

இப்புதிய ரக வட்டக்காய் உற்பத்தி நாடு முழுவதிலும் விரிவுபடுத்தப்பட வேண்டும-

சகலரும் இத்தகைய புதிய உற்பத்தி அணுகுமுறைகளைக் கையாண்டால் நாம உணவில் தன்னிறைவு காணுவதற்கு நீண்ட காலம் செல்லாது-

இத்தகைய புதிய முறைகளைக் கையாளுபவர்களுக்கு பணப் பரிசுகளும் வழங்கப்படும-

இப்படி அமைச்சர் கூறினார்-

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மேற்படி விவசாயிக்கு அமைச்சர் 11,250 ரூபா பெறுமதியான தண்ணீர் இறைக்கும இயந்திரம ஒன்றை யும் வேறு விவசாய உபகரணங்களையும அன்பளிப்பாக வழங்கினார்-

[ல—ர]

வுத செனவிரட்ன சபை ஒத்தி வைப்பு வேளையில் கேள்வி ஒன்றை எழுப்பி இருந்தார்-

அதற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்-

சில நாட்களாக பல பத்திரிகைகளும சந்தேகத்துடன் இத்தகைய கேள்விகளை எழுப்பின குறிப்பிட்ட பரீட்சை பின் போடப்பட மாட்டாது-

நாடு முழுவதிலும உள்ள சகல பாடசாலைகளிலும பாடத் திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன- அப்படி பூர்த்தி செய்யப்படாத பாடசாலைகளில் விசேட வகுப்புகள் நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன-

எனவே குறிப்பிட்ட மாதத்தில் பரீட்சை எழுத மாணவர்கள் தயாராக வேண்டும-

## வடபகுதி பெண்ணிடம் போதைவஸ்து

கொழும்பு, மே 23

கொழுமபு வாடகை விடுதி ஒன்றில் தங்கியிருந்த வடபகுதி பெண்மணி ஒருவரிடம இருந்த 18 லட்சம ரூபா பெறுமதியான ஹெரோயினை போதைவஸ்த ஒழிப்பு பணியக அதிகாரிகள் கைப்பற்றினர்-

வவுனியாவைச் சேர்ந்த இப்பெண் கொழும்புக்கு வந்த 48 மணித்தியாலங்களுக்குள் ரகசியத் தகவல் ஒன்றை அடுத்து கைது செய்யப்பட்டார்-

இந்தியாவிலிருந்தே மேற்படி போதைப் பொருள் கடத்தி வரப்பட்டிருக்க வேண்டுமென நமபும் போதைப் பொருள் ஒழிப்பு அதிகாரிகள் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர்

[ல—032]

5-30 பாமாலை — கருமாரியம்மன் திருவிருத்தம
5-45 சைவநற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை மௌலவி எம் ஓமர்தீன்
5-55 போதி மாதவனின் போதனைகள்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தகசேவை
7-30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தகசேவை
8-00 வாத்திய மஞ்சரி
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 உறுத மஞ்சரி — மௌலவி எம கியு பூர் ஹானுத்தீன் அஹமத்
9-00 வர்த்தக சேவை

பகல் —

10-00 இசையமுதம
10-30 பக்தி மஞ்சரி
11-00 நாதஸ்வரம - திருவிழா ஜெய்சங்கர்
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை —

6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 திருவாசகம — எஸ் கணபதிப்பிள்ளை
6-45 துதிப் பாடற் பயிற்சி எம நவரட்ணம
7-00 களத்துமேடு - கேள்வி - பதில்
7-15 விவசாய நாடகம — வயலோடு வசந்தங்கள்
7-30 மெல்லிசைப் பாடல்கள்
7-50 உலகச் செய்திகள்

இரவு —

8-00 தர்ஜமதல் குர்ஆன்
8-05 சமூகச் சித்திரம "ஊடுருவல்" பிரதி: திக்வெல்லை ஸமரி
8-15 கவிதைச் சரம தொகுப்பு: பாவலர் பஸீல் காரியப்பர்,

9-45 கதாப்பிரசங்கம — எம வர்ணகுலசிங்கம
10-30 நினைவில் நிறைந்தவை
11-00 ஒலிபரப்பு முடிவு-

## டெலிவிஷன்

25—5—1990

### ரூபவாஹினி

4-30 அத்வல
5-00 செய்திகள் - சிங்களம
5-15 விளையாட்டும சௌக்கியமும
5-30 ஸ்மர்ப்ஸ் கருத்துப்படம
6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-15 கருத்துப்படம
6-30 செய்திகளும காலநிலை அறிக்கையும தமிழ்
7-00 காதமபரி
7-30 உருமய
8-00 செய்திகளும காலநிலை அறிக்கையும சிங்களம
8-30 பிரமாதவடி நாடகம
9-05 லொட்டோ சீட்டிழுப்பு
9-30 செய்திகளும காலநிலை அறிக்கையும ஆங்கிலம
10-05 த கிறேன்ஸ் ஆர் ப்ளையிங்
11-40 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்.

5-59 நிகழ்ச்சி நிரல்
6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-15 கொக்கிளி ஷெல் பே
6-30 செய்திகள் - சிங்களம
7-00 கீதாஞ்சலி
7-30 சங்கீத ஷோகேஸ்
8-00 வண்டர் ஸ்ரக்
8-30 பீச் கோமபர்ஸ்
9-00 அபான்ஸ் கீ சந்துல்ல
9-30 போச்சூன்ஸ் ஒஃப் வார்
10-00 செய்திகள் - ஆங்கிலம
10-25 நிகழ்ச்சி நிரல்
10-26 போச்சூன்ஸ் ஒஃப் வார். தொடர்ச்சி
11-00 ஒளிபரப்பு முடிவு

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

# புலிகள் பற்றி கேள்விகளுக்கு பதிலளிக்க ரஞ்சன் மறுப்பு

## சபையிலிருந்து வெளியேறினார்

கொழும்பு, மே 24

தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம் பி திரு நிமல் சிறிபால டி சில்வா கேட்ட கேள்விகளுக்கு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன பதிலளிக்க மறுத்து சபையிலிருந்து வெளியேறினார்.

நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது இந்தச் சம்பவம் நடந்தது.

அமைச்சரின் இந்தச் செயல் தமக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை என்று சபாநாயகர் அல்ஹாஜ் எம் எச் முகம்மது சொன்னார். அமைச்சர்கள் பதிலளிக்க மறுத்தால் ஒத்திவைப்புப் பிரேரணையின் போது "கேள்வி நேரம்" என்று ஒன்றை வைத்திருப்பது அர்த்தமற்றதாகிவிடும் என்றும் சபாநாயகர் கூறினார்.

மற்றக்கேள்விகளுக்கு எல்லாம் பதிலளித்த தோட்டத் தொழில்துறை அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன புலிகள் பற்றிய கேள்விகளுக்கு மட்டும் பதிலளிக்க மறுத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பான எந்தக் கேள்விக்கும் தாம் பதிலளிக்கப் போவதில்லை என்று கூறிவிட்டே அமைச்சர் தமது கைப்பெட்டியை எடுத்துக் கொண்டு சபையை விட்டு வெளியே போனார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம் பி திரு நிமல் சிறிபால டி சில்வா புலிகள் வடக்கிலும், கிழக்கிலும் அத்துமீறிச் செயற்பட்டு வருவதாகவும், அட்டூழியங்கள் புரிவதாகவும் கூறி, பின்வரும் கேள்விகளை எழுப்பினார்:—

* வடக்கு, கிழக்கு மாகாணத்தை அரசாங்கம் புலிகளிடம் ஒப்படைத்து விட்டதா?
* புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் ஏதாவது இரகசிய ஒப்பந்தம் இருக்கிறதா?
* பொது மக்களும், பாதுகாப்புப் படையினரும் துன்புறுத்தப்படும் போது அரசாங்கம் கண்டும் காணாதது போல் இருப்பது ஏன்?
* இதனால பாதுகாப்புப் படையினர் விரக்தி அடைந்திருப்பது அரசுக்குத் தெரியாதா?
* நடப்பனவற்றை எடுத்துக் கூறினாலும், அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது. புலிகள் விஷயத்தில் அரசின் நிலைப்பாடு என்ன?

இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்து அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன சபையை விட்டு வெளியேறியதும் எதிர்க்கட்சியினர் அதைக் கண்டித்தனர்.

உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிக்க மறுப்பது சிறப்புரிமையை மீறுவதாகும், என்று அவர்கள் சுட்டிக்காட்டினர். சபாநாயகர் நீதி வழங்க வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் கோரிக்கையும் விடுத்தனர்.

அப்போது ஆளும் கட்சியினருக்கும், எதிர்கட்சியினருக்குமிடையே பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

சபையில் அமைதியை ஏற்படுத்த சபாநாயகர் பகீரதப் பிரயத்தனம் செய்தார்.

புலிகள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்து அமைச்சர் சபையை விட்டு வெளியேறிய சம்பவம் பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகச் சபாநாயகர் கூறினார். அதை அடுத்து சபையில் அமைதி ஏற்பட்டது.


(உ—ய)

## தொழுநோயாளர்

மாத்தளையில் தொழுநோயாளர்கள் இரண்டு பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

கடும் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த இவர்கள் தம் புள்ளை ஆஸ்பத்திரிக்கு வந்திருந்த போதே தொழுநோயால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

[ல—ர]



## ஜனாதிபதி — போரா சமூக தலைவர் பேச்சு

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தாவூதி போரா சமூகத்தின் தலைவர் கலாநிதி செய்யிதினா, முஹம்மத் புர்ஹானுத்தீன் நேற்று முன்தினம் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவைச் சந்தித்தார். சபாநாயகர் அல்ஹாஜ் எம் எச் முகம்மதுவும் அப்போது உடனிருந்தார்.

இலங்கையில் சமாதானம் ஏற்பட்டமைக்காக கலாநிதி புர்ஹானுத்தீன் நாட்டையும் மக்களையும் வாழ்த்தினார். ஜனாதிபதிக்கு அவர் விசேட ஆடையொன்றைப் போர்த்தினார்.

பின்னர் அவர் ஜனாதிபதி நிதியத்துக்கு 11 லட்சம் ரூபா அன்பளிப்புச் செய்தார். அதற்கான காசோலை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அவருடன் வந்த போரா சமூகத்தின் 9 பிரமுகர்களும் இந்தச் சந்திப்பின் போது உடனிருந்தனர்.

[ல—ற]

# ஈ. பி. ஆர். எல். எப். குழுவுடன் அரசு பேசியது ஏன்?

## புலிகளுக்கு ஹமீது விளக்கம்

கொழும்பு, மே 24

கலந்துரையாடல், விட்டுக் கொடுத்தல் மற்றும் இணக்கம் என்ற அடிப்படையில் சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவின் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த அடிப்படையிலேயே அரசு ஈ பி ஆர் எல் எப் குழுவுடன் பேச்சு வார்த்தை நடத்தியது. இது எவ்வகையிலும் அரசு புலிகளுடன் நடத்தும் பேச்சு வார்த்தைகளின் முக்கியத்துவத்தை குறைத்துவிடாது.

நீதி அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீது புலிகள் இயக்கத்துக்கு இப்படித் தெரிவித்து இருக்கிறார்.

அமைச்சருக்கும், புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைச்சருடனான பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர்.

பேச்சு வார்த்தை 5 மணித்தியாலங்களாக நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு பாதுகாப்பு நிலைமையைப் பற்றியும், புலிகளுக்கும், பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையே மேலும் புரிந்துணர்வை ஏற்படுத்துவது பற்றியும் பேச்சு வார்த்தையின் போது ஆராயப்பட்டன.

ஈ பி ஆர் எல் எப் இயக்கம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிநிதித்துவப்படுத்த வில்லை. ஆகவே அவர்களுடன் அரசு பேச்சு வார்த்தை நடத்தியதையிட்டு நாம் அதிருப்தி அடைந்துள்ளோம்.

இப்படி புலிகள் இயக்க பிரதிநிதிகள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

சகல தரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்தி 'பிரச்

சிங்களவர்களினதும், முஸ்லிம்களினதும் எதிர்காலத்தை பற்றியும் ஆராயப்பட்டது.

பிரச்சினைக்கான இறுதித் தீர்வில் சகல சமூகங்களும் தமது தனித்துவத்தை பேணிக் கொள்வதும் ஜனநாயக சூழலில் தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதும் முக்கியமாகும் என அமைச்சர் ஹமீது தூதுக்குழுவினருக்கு எடுத்துக் கூறினார்.

மீதமாக உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதில் பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக புலிகள், அமைச்சரிடம் தெரிவித்தனர்.

பேச்சு வார்த்தைகள் அடுத்த வாரம் தொடரும்.

(ல—ற)

## ஹஜ் விளக்க விரிவுரை

வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளியில் அல்ஹாஜ் எம் எச் எம் ஜுனைத் மௌலவி அவர்களின் தலைமையில் பல சிறந்த உலமாக்களின் அனுசரணையுடன் ஹஜ் கடமைகள், அதன் ஒழுக்க வழிமுறைகள் பற்றிய விளக்கமான விரிவுரைகள் கீழ்காணும் திகதிகளில் (மஃரிப் தொழுகையின் பின்) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விரிவுரைகள் நடைபெறும் தினங்கள்—
27-5-90 — 03-6-90 — 6-6-90

ஹஜ் விளக்கம் பற்றி ஹஜ்ஜாஜிகளின் வினாக்களுக்கு உலமாக்களினால் தெளிவான விளக்கம் அளிக்கப்படும்.

ஏற்பாடு— இக்பால் ஹாஜியார்

1990

## ஹஜ் யாத்திரை 1990

இன்ஷா அல்லாஹ் முன்னைய வருடங்கள் போல் இவ்வருடமும் எமது ட்ரெவல் எக்ஸ்சேன்ஜ் ஸ்தாபனம் புனித ஹஜ் கடமை மேற்கொள்பவர்களின் பிரயாண வசதிகளை வழங்க முன்வந்துள்ளது. எங்கள் செலவு தொகை ரூபாய் 47,500/- (டிக்கட், குர்பான் செலவு தவிர்த்து) ஜூன் மாதம் புறப்படவுள்ள எமது குழுவில் சேர விரும்புபவர்கள் கீழ்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

TRAVEL EXCHANGE

வட்டிவீதம்

குறைக்கும்

## புனித ஹஜ் யாத்திரை—1990

இன்ஷா அல்லாஹ்

புனித ஹஜ் கடமை நிறைவேற்றச் செல்லும் ஹஜ் யாத்திரைகளுக்கு முன்னைய வருடங்களைப் போல் இவ் வருடமும் திறமை வாய்ந்த மௌலவிகளின் வழி நடத்தலுடன் முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள எமது நிறுவனம் குறைந்த செலவில் நிறைந்த வசதிகளை செய்து கொடுக்க முன்வந்துள்ளது.

- விமான டிக்கட், உணவு, ஹறம ஷரீப் அருகில் குளிரூட்டப்பட்ட தங்கும் இடம். (அஜியாத் ஆஸ்பத்திரி அருகாமையில்)
- பயணத்துக்கான கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) அற்றோருக்கு உடன் அதற்கான ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
- புனித பூமியின் சரித்திரம் வாய்ந்த புனித ஸ்தலங்களை தரிசிப்பதற்குரிய ஒழுங்குகள்.
- ஹஜ் யாத்திரையின் ஆரம்பம் முதல் இறுதிவரை சகல விடயங்களிலும் கவனிக்கப்படும்.

இவை அனைத்து வசதிகளை பெற்று புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற விபரங்களுக்கும் ஆசன பதிவுகளுக்கும்

கட்டணம் (விமான டிக்கட் குர்பான் இல்லாமல்) 37,500/-

தொடர்பு கொள்க:

அல்ஹாஜ் எம் எஸ் சிப்லி ஹமீட்
அல்ஹாஜ் எம் பதிரி ஹாசிம்
தொலைபேசி: 546504

அல்ஹாஜ் எம் அன்சார்
அன்ஸார் டிரேட்ஸ்
96, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12.
போன்: 431959

**WONDROUS TRAVEL SERVICE**

19, ஹுசேனியா வீதி,
கொழும்பு-12-
போன்: 546504.



இப்பத்திரிகையை, அச்சிட்டு வெளியிட்டது தினபதி லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12, இலங்கை தபால் பெட்டி இல 613 வெளியிட்ட திகதி 5 மே 1990.

DINAPATHI, 5, Gunasena Mawatha, Colombo — 12
P.O. Box 1613.


## வட்டிவீதம் குறைக்கும் நோக்கம் இல்லை

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவற்றுக்கான வட்டி வீதம் குறைக்கப்பட மாட்டாது. அவற்றைக் குறைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை.

வெளிவிவகார அமைச்சரும் நிதி ராஜாங்க அமைச்சருமான திரு ஹெரல்ட் ஹேரத் இப்படித் தெரிவித்தார்.

தற்பொழுது 13 சதவீதமாக வழங்கப்பட்டு வரும் வட்டி வீதத்தை 11 சதவீதமாகக் குறைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக வந்த செய்திகள் தவறானவையாகும் என்று அமைச்சர் கூறினார்.

[ல—ய]

...அமைச்சருக்கும், புலிகள் இயக்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கம் விடுத்த அறிக்கையொன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது—

புலிகளின் சார்பில் திரு மகேந்திரராசா (மாத்தையா), கலாநிதி அன்டன் பாலசிங்கம், திரு யோகரத்தினம், திரு பானு மற்றும் செல்வி ஜெயா (மகளிர் விடுதலை முன்னணி) ஆகியோர் ...நிதிகள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

சகல தரப்பினருடனும் பேச்சு வார்த்தை நடத்தி பிரச்சினைகளை தீர்ப்பதென்ற ஜனாதிபதி பிரேமதாசவின் கொள்கையின்படி ஈ பி ஆர் எல் எப் இயக்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இது எவ்வகையிலும் புலிகளுடனான பேச்சு வார்த்தைகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து விடாது.

இப்படி அமைச்சர் தூதுக் குழுவிடம் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையை கலைத்து கூடிய விரைவில் புதிய தேர்தலை நடத்துமாறும், 6ஆவது அரசமைப்பு திருத்தத்தை நீக்குமாறும் புலிகள் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டனர்.

இந்த விடயங்கள் மிகக் கவனமாக ஆராயப்பட்டு வருவதாக அமைச்சர் ஹமீத் அவர்களுக்கு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் வாழும்

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம் 1990 மே 23 இல்.

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 3998.50 | ரூ | 4001,50 |

வர்த்தக வங்கிகள் வழங்கும் தந்தி மூல பிறநாட்டு நாணய உடன் மாற்று விகிதம்: 1990 மே 23 இல்.

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 3990-00 | ரூ | 4003-75 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | ரூ. | 6761-91 | ரூ | 6823-11 |
| 100 ஜெர்மன் மார்க்ஸ் | ரூ. | 2381-17 | ரூ | 2414-09 |
| 100 பிரெஞ்சு பிராங் | ரூ. | 703-54 | ரூ | 720-52 |
| 100 ஜப்பான் யென் | ரூ. | 26-2913 | ரூ | 26-6977 |

பாவனையாளர்களுடன் வர்த்தக வங்கிகள் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்றத்தைக் கடைப்பிடிக்கும் மத்திய வங்கி வாங்கும் விகிதம் ஆகக் குறைந்த வாங்கும் விகிதம் ஆகக் கூடிய விற்கும் விகிதம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 100 வங்காளதேச டகாஸ் | ரூ. | 114-40 | ரூ | 114-83 |
| 100 பர்மா கியாட்ஸ் | ரூ | 619-90 | ரூ | 622-34 |
| 100 இந்திய ரூபா | ரூ. | 230-29 | ரூ | 231-25 |
| 100 ஈரான் ரியால் | ரூ | 57-15 | ரூ | 57-36 |
| 100 நேபாள ரூபா | ரூ | 137-17 | ரூ | 137-74 |
| 100 பாகிஸ்தான் ரூபா | ரூ | 182-23 | ரூ | 182-99 |

## மாதாந்த ஆய்வுரை 26இல்

கொழும்பு, மே 24

சமயமும் கவிதையும் தமிழ் கண்ணோட்டம் எனும் தலைப்பிலான மாதாந்த ஆய்வுரை எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4-15க்கு கொழும்பு "ரக்ஷன மந்திரயில்" நடைபெறும்.

இந்து சமய இந்து கலாசார ராஜாங்க அமைச்சின் மாதம் ஓர் ஆய்வுரைத் திட்டத்தின் கீழ் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி ஆய்வுரை நடத்துவார்.

[ல—ர]


...முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்—

**TRAVEL EXCHANGE**

47/1, 2 ஆம் குறுக்குத் தெரு
முதலாவது மாடி, கொழும்பு—11
தொலைபேசி- 436244 — 24271 (ஆபீஸ்)
435100 — 587995 (இல்லம்)

ஹஜ் யாத்திரை செய்வோருக்கு

**குறைந்த செலவு**

**நிறைந்த வசதி**

இன்னும் சொற்ப ஆசனங்களே காலியாக இருக்கின்றன

தொடர்பு கொள்ளவும்—

**மக்கா**

**டிரவல் சேர்விஸ்**

147/1- மெலிபன் வீதி
கொழும்பு-11
தொலைபேசி- 29654/33221